# කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# PERFORMANCE REPORT

# 2020

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டது**

**PFD / RED / COPA / 2019 / 01 ஆம் இலக்க 2020.01.30 ஆம் திகதிய வழிகாட்டல்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டது**

# உள்ளடக்கம்

பக்க இல.


| | | |
|---|---|---|
| **அத்தியாயம் - 01** | **நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு** | **01** |
| 1.1 | அறிமுகம் | 02-06 |
| 1.2 | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் | 07-08 |
| 1.3 | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிரதான பணிகள் | 08-09 |
| 1.4 | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு | 10 |
| 1.5 | இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம் | 11-12 |
| **அத்தியாயம் - 02** | **முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்** | **13** |
| 2.1 | சிறப்பு அடைவுகள் | 14 |
| 2.2 | சவால்கள் - எதிர்கால இலக்குகள் | 15 |
| 2.3 | நலன்புரி | 15-16 |
| **அத்தியாயம் - 03** | **வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** | **17** |
| 3.1 | நிதிச் செயலாற்றுகைக் கூற்று | 18 |
| 3.2 | நிதிச் செயலாற்றுகைக் கூற்று – வெகுமதி நிதியம் | 19 |
| 3.3 | நிதி நிலைமை பற்றிய கூற்று | 20 |
| 3.4 | நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று | 21 |
| 3.5 | நிதியியற் கூற்றுக் குறிப்புகள் | 22 |
| 3.6 | வருமானம் சேகரித்தற் செயலாற்றுகை | 22 |
| 3.7 | ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை | 22 |
| 3.8 | நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு | 22-23 |
| 3.9 | நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை | 23 |
| 3.10 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 24-36 |
| **அத்தியாயம் - 04** | **செயலாற்றுகைச் சுட்டிகள்** | **37** |
| 4.1 | அறிமுகம் | 38 |
| 4.2 | நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் | 39-40 |
| **அத்தியாயம் - 05** | **பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை** | **41** |
| 5.1 | அறிமுகம் | 42 |
| 5.2 | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின செயற்பாடுகள் | 43-48 |
| 5.3 | முன்னேற்றம் | 43-48 |
| **அத்தியாயம் - 06** | **மனிதவள விபரம்** | **49** |
| 6.1 | பதவியணி முகாமைத்துவம் | 50 |
| 6.2 | நிறுவனத்தின் நிறைவேற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை | 51-52 |
| 6.3 | மனித வள அபிவிருத்தி | 53-60 |
| **அத்தியாயம் - 07** | **இணக்கப்பாட்டு அறிக்கை** | **61** |
| **7.1** | நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை | 62-70 |

# 2020 ஆம் வருடத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | - | இலங்கை மதுவரித் திணைக்களம் |
| நிறுவனத்தின் முகவரி | - | இல 353 இ கோட்டை வீதி இ ராஜகிரிய |
| செலவுத் தலைப்பு இல. | - | 248 - மதுவரித் திணைக்களம் |
| மின்னஞ்சல் | - | excisen@slt.lk |
| இணையம் | - | *httpl*.excise.gov.lk |
| தொலைபேசி இல | - | 0113-888022 |
| ∴பக்ஸ் இல | - | 0112-877890 |
| 24 மணிநேர அழைப்பு | - | 1913 |

# அத்தியாயம் - 01

## நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

**1.1** அறிமுகம்

**1.2** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

- **1.2.1** தூர நோக்கு
- **1.2.2** பணிக்கூற்று
- **1.2.3** குறிக்கோள்கள்

**1.3** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிரதான பணிகள்

**1.4** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு

**1.5** இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம்

## 1.1. அறிமுகம்

இலங்கை மதுவரித் திணைக்களமானது, தற்போது வரை ஏறத்தாழ நூற்றி ஆறு வருட வரலாற்றைக் கொண்டு இலங்கையின் பிரதான அரச வரி வருமானமீட்டும் நிறுவனங்களில் மூன்றாவதாகத் திகழ்கிறது. 1912 இன் 8 ஆம் இலக்க மதுவரிக் கட்டளைச்சட்டம் செயல்வலுப்படுத்தல் 1913 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் திணைக்களத் தலைவராக மதுவரி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் பின்னர் அப்பதவி மதுவரி ஆணையாளர் நாயகமாக திருத்தஞ் செய்யப்பட்டது. 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிர்வாக மற்றும் மேற்பார்வை உதவிகளின் பொருட்டு மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு உதவும் வகையில் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஒருவரும் பதில் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஒருவரும் மதுவரி ஆணையாளர்கள் இருவரும் பிரதான கணக்காளர் ஒருவரும் கணக்காளர்கள் இருவரும் பிரதி மதுவரி ஆணையாளர்கள் 6 பேரும் நிர்வாக உத்தியோகத்தர்கள் இருவரும் சேவை புரிந்தனர். மேலும், மதுவரித் தலைமை அலுவலகத்தில் உள்ளக நிர்வாகத்தினை முறைப்படி மேற்கொள்ளும் பொருட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று அமைந்துள்ளதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் கணக்காய்வுப் பிரிவும், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரப் பிரிவு ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சகல மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு 13 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்கள், 30 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள், 56 மதுவரி நிலையங்கள், 05 மதுவரி விசேட நடவடிக்கைப் பிரிவுகள், போதைப்பொருள் தடுப்புப் பிரிவு என்பன அடங்கலாக வினைத்திறன் மிக்க விசாலமான நிறுவகமாக சேவை வழங்குகிறது. அத்துடன் அற்ககோல், சிகரட் உற்பத்தி தொடர்பான உற்பத்திச்சாலைகளில் அமைந்துள்ள மதுவரிப் பிரிவுகளில் மேற்பார்வை பொருட்டு மதுவரிப் பணியாளர் குழாத்தினர் இணைக்கப்பட்டுள்ளனர்.

மீளாய்வு வருடம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இத்திணைக்களத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 1276 ஆக இருந்தது. வெற்றிடங்களின் எண்ணிக்கை 316 ஆக உள்ளதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையின் 20% ஆகும். இவ்வலுவலர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையானது, திணைக்களம் எதிர்பார்க்கும் நிறைவேற்றுகையை வெற்றிகரமாக எய்துவதற்கான பங்களிப்பை வழங்குகிறது.

மதுவரி, புகையிலை வரி வருமான முகாமை, அதற்கான சட்ட வலுப்படுத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய முத்தரப்பு பெறுபேறுகளை மேற்கொள்ள திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. 2020 இல் திணைக்களம், ரூபா 121.03 பில்லியன் ஐ மதுவரி, புகையிலை வரி வருமானமாக பொதுத் திறைசேரிக்கு சேர்த்துள்ளது.

2019 இல் ஸ்தாபிக்கப்பட்ட மதுவரிச் செயற்பாட்டுக் கருமபீடமானது, 1913 எனும் தொலைபேசி அழைப்பின் ஊடாக பல்வேறு நிறுவன, பொதுசன முறைப்பாடுகளை உடனடியாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் முகாமை செய்தல் என்பன முந்தைய வருடத்திலும் பார்க்க முறைப்படியும் வினைத்திறனுடனும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020 இல் மதுவரி அலுவலர்களால் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட 39,623 சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதன் ஊடாக பெறப்பட்ட தண்டப்பணம் ரூபா 145,804,050 ஆகும். மதுவரிக் குற்றத் தடுப்புப் பிரிவினால் 100 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருட்களும் 100 கிலோ கிராம் ஹெரோயினும் சிலாபம் தொடுவாவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதுடன், அதன் பெறுமதி ரூபா 2100 மில்லியன் ஆகும். இது இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பானதொரு சுற்றிவளைப்பாகும்.

இவ்வெற்றிகரமான அரசபணியை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் இயைபுடைய சகல அலுவலர்கள், இலங்கை பொலிஸ், இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுற்றுலாத்துறை அதிகாரசபை, தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு சபை, அரச பகுப்பாய்வாளர் திணைக்களம், புகையிலை மற்றும் அற்ககோல் சம்பந்தமான தேசிய அதிகாரசபை, சட்டமாஅதிபதித் திணைக்களம் அடங்கலாக சகல நிறுவனங்களும் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

2020 இல் நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக மொத்த அரச சேவைக்கும் ஏற்பட்ட தாக்கம் காரணமாக ஓரளவிற்கு இடையூறு ஏற்பட்ட போதிலும் அவ்வருடத்திற்குரிய நிறுவனம்சார் நிறைவேற்றுகை மட்டத்தை உயர் சதவீதத்தில் பேணும் பொருட்டு வழங்கிய ஒத்துழைப்பிற்காக மதுவரித் திணைக்களத்தின் சகல மதுவரி அலுவலர்கள் மற்றும் நாடளாவிய சேவை அலுவலர்கள் அடங்கலாக சகல மதுவரி அலுவலர்களிற்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.ஜே.குணசிறி
மதுவரி ஆணையாளர் நாயகம்

## 1.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව

**Excise Department of Sri Lanka**

*“ වගකීමෙන් සුරක්ෂාවට ”*

***“ Protection through responsibility ”***

**தூர நோக்கு**

மதுபான, புகையிலைக் கைத்தொழிலை முறைப்படி ஒழுங்குபடுத்தலின் ஊடாக அரசிறை வருமான மேம்பாட்டின் பொருட்டு மிகவும் கௌரவமான, பொறுப்புவாய்ந்த அரச நிறுவனமாகத் திகழுதல்.

**பணிக்கூற்று**

சட்டரீதியான விற்பனை வருமானத்தை உருவாக்கும் பொருட்டு வசதிகளைத் திட்டமிடலின் ஊடாகவும், அமுல்படுத்த இயலுமான சகல சட்ட, ஒழுங்குவிதிகளிற்கு இசைவாக செயல்வலுப்படுத்தலின் ஊடாகவும், சட்ட விரோத மதுபானம், அபாயகரமான அவுடதங்கள் மற்றும் மனநிலை தடுமாற்றப் பதார்த்தங்களின் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவும், தரமற்ற அற்ககோல் பாவனையினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளிலிருந்து பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும், பொருளாதார வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக, நாட்டினுள் மதுபானங்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அற்ககோல்களை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நிர்வகித்தல்.

**குறிக்கோள்கள்**

- உபாயத்திறன், செயற்பாட்டு மற்றும் உபாயத்திறன் மட்டங்களில் பயன்மிக்க தீர்மானங்களை எடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு நிறுவனக் கண்ணோட்டமாக இணக்க மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்தின் ஊடாக வருமானம் சேகரித்தலை உயர்வுபடுத்துதல்
- வருமானத்தை உயர்த்தும் நோக்கில் அறிவை தொடர்ச்சியாக பரிமாற்றம் செய்தலின் ஊடாக உரிய சட்டங்களுடன் பங்குதாரர்களின் இசைவை உயர்த்தலின் மூலம் விற்பனைக்கு வசதியளித்தல்.
- மதுபான, புகையிலை வருமானத்தை நிர்வகித்தல் மற்றும் வசதியளித்தல் இடையே சமநிலையைப் பேணும் பொருட்டு அடிப்படையான இடர் முகாமைத்துவக் கோட்பாடுகளில் வினைத்திறன் மிக்க பிரயோகத்தை மேற்கொள்ளல்.
- மதுவரி சேகரித்தலில் நேர்மையையும் வினைத்திறனையும் பிரயோகித்து பொது மக்களின் நம்பிக்கையைப் பேணுதல்.
- மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை, தூய்தாக்கப்பட்ட மதுசாரம், தன்மை மாற்றப்படாத மதுசாரம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட போதைப்பொருட்களை ஒழுங்கு படுத்தல்.
- சட்ட விரோத மதுபானம் மற்றும் போதைப் பொருட் பாவனைக்கு எதிராக தொடர்ச்சியாக நடவடிக்கைகளை அமுல்படுத்தலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதலும்.
- சட்ட விரோதமாக மதுசாரம் வடித்தல் மற்றும் இரகசியமாக உரிமம் இன்றி மதுசாரம் வடித்தல் என்பவற்றிற்கு எதிராக சட்ட ஒழுங்கு விதிகளை செயல்வலுப்படுத்தல்.
- தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக போதியளவு தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் இருத்தலை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் இயலுமையை விருத்தி செய்தலும் கொள்ளளவைக் கட்டி எழுப்பலும்.
- அதியுயர் திருப்தி மற்றும் முறையான பயிற்சியுடனான அர்ப்பணிப்பு மிக்க அலுவலர்களைப் பேணுதல்.
- மதுபான, போதைப்பொருட் பாவனையைத் தடுத்தல் மற்றும் போதைப்பொருள், மனோவசியப் போதைப்பொருட்களை சட்ட விரோதமாக ஏற்றி இறக்கலை தடுத்தல்.
- நச்சு போதைப்பொருள் மற்றும் நச்சு மதுபான விற்பனையை ஒழித்தலும் அவற்றைப் பாவித்தலில் இருந்து பொது மக்களைப் பாதுகாத்தலும்.
- நிதி அமைச்சு மற்றும் ஏனைய வெளியக நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேணுதல் மற்றும் வினைத்திறன் மிக்க வரி முறைமையைப் பேணுதல்.

## 1.3 பணிகள் மற்றும் பெறுமானங்கள்

**பணிகள்**


- சகல உரிமம் பெற்ற நிலையங்களையும் மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்தல் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரித்தல்.
- மதுவரிக் கட்டளைச் சட்டம், புகையிலை வரிச்சட்டம் என்பவற்றை வினைத்திறன் மற்றும் பயனுறுதி மிக்க முறையில் செயல்வலுப்படுத்தல்.
- நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்தும் நிறுவனமாக செயலாற்றுதல்.
- நாட்டின் சமூகப் பாதுகாப்பின் பொருட்டு புகையிலை மற்றும் அற்ககோல் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தினை அமுல்படுத்துதல்.

- இலங்கைப் பொலிஸ், சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற ஏனைய சட்ட வலுப்படுத்தும் நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல்.
- சட்ட விரோத மதுபானம், போதைப்பொருட்களிற்கு எதிராக நிறுவன நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தெளிவுபடுத்தல் மற்றும் சட்ட விரோத மதுபானம், அபாயகர அவுடதங்களின் ஆபத்து பற்றி மாணவர்கள் மற்றும் சமூகத்தை தெளிவுபடுத்தல்.
- 2008 இன் 01 ஆம் இலக்க போதைப்பொருட்கள் மற்றும் மனோவசியப் பொருட்களை சட்ட விரோதமாக ஏற்றி இறக்கலுக்கு எதிராக சமவாயத்தை அமுலாக்குதல்.
- திட்டமிடப்பட்ட வருடத்தினுள் சகல மட்ட பணியாளர்களிற்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- கூட்டங்கள், கலந்துரையாடல்கள் பொருட்டு சகல தரப்பினருடனும் வினைத்திறன் மிக்க பங்களிப்பை வழங்கல்.


### பெறுமானங்கள்

- அனைவரையும் சமமாக நடத்தும் நட்பு மற்றும் வெளிப்படையான தன்மையுடைய சேவையை வழங்கும் கலாச்சாரத்தைப் பேணுதல்.
- இறுதி இலக்கை நோக்கிச் செல்லக்கூடிய, குழு மனப்பான்மையுடன் சேவையாற்றக் கூடிய அலுவலர்களைக் கொண்டிருத்தல்.
- பாதுகாப்பான எதிர்காலத்தின் பொருட்டு எதிர்கால சந்ததியினருக்கு சரியான வழிகாட்டலின் நோக்கில் சட்ட விரோத மதுபான, போதைப்பொருட்களை ஒழித்தற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மனிதப் பெறுமதியை மதிக்கும் தனிநபர் ஒருவரை சமுகமயமாக்குதல்.
- முறையான உபாயத்திறன் மிக்க திட்டத்தில் நடவடிக்கை எடுத்தல்.
- புதிய தொழில்நுட்ப முறையின் கீழ் பயனாளிகளிற்கு வினைத்திறன் மிக்க, அதியுயர் சேவையை வழங்குதல்.
- நவீன தொழில்நுட்ப முறையின் கீழ் சரியான முறையில் வரி சேகரித்தல்.
- நம்பகரமான தரவுத் தளத்தைப் பேணுதல்.
- நச்சு போதைப்பொருட்கள் மற்றும் நச்சு மதுபானப் பாவனையை இழிவுபடுத்தும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.
- வெளியக நிறுவனங்களுடன் நல்ல ஒருங்கிணைப்பைப் பேணுதல்

# 1.4 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிடங்கள்



# அத்தியாயம் -02

## முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள்

- 2.1.1 வருமானம்
- 2.1.2 குற்றம்
- 2.1.3 ஆதரவளிப்பு
- 2.1.4 புதிய பிரிவுகளைத் தாபித்தல்

2.2 சவால்கள் - எதிர்கால இலக்குகள்

2.3 நலன்புரி

## 2.1 சிறப்பு அடைவுகள்

### 2 : 1 : 1 வருமானம்

- 2020 மார்ச் மாதம் முதல் வருட இறுதி வரை நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் மத்தியிலும் இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் 2020 இற்கான மதுபான வரியாக ரூபா 120,989,956,654.00 ஐயும் புகையிலை வரியாக ரூபா 38,565,392.00 ஐயும் வருமானமாக ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் சிறப்பு அடைவாகக் காட்டப்படலாம். மேலும் மதுபான வரி 2019 உடன் ஒப்பிடுகையில் 5% அதிகரிப்பைக் காட்டுவதுடன், புகையிலை வரி வருமானம் 18% அதிகரிப்பை அறிக்கையிடப்பட்டுள்ளது.
- அற்ககோல் தொடர்பான உற்பத்திகளிற்கு பாதுகாப்பு ஸ்ரிக்கரை இனங்காணுதலின் ஊடாக இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானங்களில் ஏற்படும் வரிக் குறைபாடுகளின் ஊடான சட்ட விரோத வர்த்தகத்தைக் கட்டுப்படுத்த முடிந்தது. இப்பாதுகாப்பு ஸ்ரிக்கர் உள்நாட்டு மதுபான உற்பத்தி பொருட்டும் 2021 யூலை அளவில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- பாதுகாப்பு ஸ்ரிக்கர் வேலைத்திட்டம் செயற்படுத்துவதற்கு 2019.06.20 ஆம் திகதிய 2128/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிமுகஞ் செய்தல். அவ்வாறே 2020.03.01 ஆம் திகதிய 2164/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2020.06.01 ஆம் திகதிய 2178/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிமுகஞ் செய்தல்.
- வரி கணிப்பிடும் கணனி மென்பொருளைத் தயாரித்து அதனை செயற்படுத்துதல்.
- 2020 இல் இலங்கை மதுவரித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட சகல உரிமங்கள் பற்றியும் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள சகல உரிமங்கள் பற்றியும் திணைக்கள இணையத்தில் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- புகையிலைக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தல், அதன் வரி அறவிடும் முறைமையைத் தயாரிக்கும் ஆரம்ப நடவடிக்கையாக புகையிலை உற்பத்திகளான பீடி, சுருட்டு தொடர்பான உற்பத்தித் தகவல்களை கணனிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

### 2 :1: 2 குற்றங்கள்

- 2020 இலே இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 107 வருட வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய சுற்றிவளைப்பான 100 கிலோ கிராம் ஹெரோயினும் 100 கிலோ கிராம் ஐஸ் உம் சிலாபம் தொடுவாவ பிரதேசத்தில் மூன்று சந்தேக நபர்களுடன் கைது செய்யப்பட்டது. அதன் பெறுமதி 2100 மில்லியனாகும். அத்துடன் நாடு முழுவதும் 39,623 சட்ட விரோத போதைப்பொருள் மற்றும் மதுபான சுற்றிவளைப்புகள் மேற் கொள்ளப் பட்டதுடன் இங்கு அறவிடப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 145,804,050 ஆகும்.

- நாடு முழுவதும் உள்ள மதுவரி உரிம நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முழுமையான மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தின் ஊடாக உரிம நிபந்தனைகளை மீறுதல் தொடர்பான 2,747 தொழில் நுட்பக் குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் அரசிற்கு கூட்டுத்தண்டப்பணம் ரூ.156,290,349.81 இனைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.

- பொது மக்களுடன் நெருக்கமாக பணியாற்றும் பொருட்டு பொது சன முறைப்பாடுகளிற்கு முக்கியத்துவம் வழங்கலின் பொருட்டு விசேட தொலைபேசி இல. 1913 இனை 24 மணி நேரமும் செயற்படுத்துவதன் ஊடாக 4,166 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன், அம்முறைப்பாடுகள் மதுவரிப் பிராந்திய அலுவலகங்களிற்கு அனுப்பப்பட்டன.

### 2:1:3 ஆதரவளிப்பு

- இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு 2020 இல் புதிதாக வாகன கொள்வனவு இடம்பெறவில்லை என்பதுடன், நிர்மாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்த பூகொடை, கண்டி மதுவரி நிலையங்களில் நிர்மாண நடவடிக்கை முடிவடைந்ததுடன் முல்லைத்தீவு, பருத்தித்துறை மற்றும் அம்பாறை மதுவரி நிலையங்களில் நிர்மாணம் தொடர்ச்சியாக நடைபெறுதலும் 2020 இல் நடைபெற்றது. அத்துடன் கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் நடைபெற்ற வாகன கணக்கெடுப்பிற்கு அமைய

திணைக்களத்திடமுள்ள வாகன எண்ணிக்கை, அவற்றின் நிலை மற்றும் வாகனம் சம்பந்தமான அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதன்படி பயன்பாட்டிற்கு உதவாத வாகனங்கள் இனங்காணப்பட்டு அவற்றை ஏலத்தில் விடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2: 1: 4 புதிய பிரிவுகளைத் தாபித்தல்

- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் கற்கைகளிலும் பயன்படுத்தப்படும் தரவுகளின் சரியான முறைமையின் கீழ் பகுப்பாய்வு செய்யப்படும் தேவைப்பாட்டின் மீது புள்ளிவிபரப் பிரிவு ஒன்று 2020 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பிரிவிற்காக தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரவியலாளர் ஒருவர் நிரந்தரமாக மதுவரித் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ளார்.

### 2 : 2 சவால்கள் - எதிர்கால இலக்குகள்

- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஊடாக மதுபானம், புகையிலை பொருட்டான வரி வருமானம் ரூபா 130 பில்லியனை அரச திறைசேரிக்கு பெற்றுக்கொடுத்தல்.
- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அலுவலர்களின் எண்ணிக்கை போதாமை காரணமாக நாடு முழுவதும் 2693 பேர் வரையில் அதிகரித்தல்.
- நாடு முழுவதும் அமைந்துள்ள சகல விசேட நடவடிக்கைப் பிரிவுகள், பிராந்திய அலுவலகங்கள், நிர்வாக அலுவலகங்களிற்குத் தேவையான வாகனங்கள், கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு அவசர நடமாடும் அழைப்புத் தொடர்பாடல் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் தொடர்பாடல் நிலையங்களை ஸ்தாபித்தல்.
- இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு உரிய சகல உற்பத்திச்சாலைகளையும் அதன் உற்பத்திச் செயன்முறைகளையும் மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துடன் வலையமைப்புச் செய்தல் மற்றும் சகல பிரதான பணிகளையும் கணனிப்படுத்தல்.
- இலங்கை சுங்கம், இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை மதுவரித் திணைக்களம் என்பவற்றிற்கு இடையே தகவல் வலையமைப்பைப் பேணுதல்.
- அற்ககோல் தொடர்பான உற்பத்திச் செயன்முறை மற்றும் அவற்றின் சந்தைப்படுத்தலில் ஏற்படும் பிரச்சனைகள், தர மேம்பாடு என்பன பொருட்டு சீதுவ இரசாயனப் பகுப்பாய்வு கூடத்தை அமைத்தல், அதற்கு தேவையான ஆய்வுகூடப் பரிசோதனை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.
- வினைத்திறன் மிக்க சேவை பொருட்டு திணைக்களம் சார் அலுவலர்களிற்கு புதிய சேவைப் பிரமாணங்களை அறிமுகஞ் செய்தல்.
- மதுவரி சட்ட, ஒழுங்கு விதிகளினை காலத்தோடொத்த, எதிர்கால தேவைகளின் நோக்கில் நிலவும் சட்டங்களிற்கு பொருத்தமானவாறு திருத்தங்களை சேர்த்தல்

### 2: 3 நலன்புரி

- இலங்கை மதுவரித் திணைக்களத்தில் நலன்புரிச் சங்கத்தை அமைத்தலின் ஊடாக அலுவலர்களின் தேவைகளை ஆராய்தல்.

- அரச வருமான மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்பு மிக்க சேவையை வழங்கும் சகல மதுவரித் திணைக்கள அலுவலர்களிற்கும் வெகுமதி நிதியத்திலிருந்து கொடுப்பனவை மாதாந்தம் வழங்க நிதி அமைச்சிடம் யோசனை ஒன்றைச் சமர்ப்பித்தல்.

# அத்தியாயம் - 03

## வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று
3.2 நிதிச் செயலாற்றுகைக் கூற்று – வெகுமதி நிதியம்
3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று
3.4 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று
3.5 நிதியியற் கூற்றுக் குறிப்புகள்
3.6 வருமானம் சேகரித்தற் செயலாற்றுகை
3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை
3.8 நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு
3.9 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை
3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தின் பொருட்டு** **ஏசிஏ-எப்.'.**

**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

**ரூ.**

| பாதீடு 2020 | | குறிப்பு | உண்மை 2020 | 2019 | |
|---|---|---|---|---|---|
| 135,000,000,000.00 | **வருமானம் பெறுகை** | | 121,028,522,046.00 | 115,417,028,272.00 | |
| - | வருமான வரி | 1 | 121,028,522,046.00 | 115,417,028,272.00 | |
| - | உள்நாட்டு பொருட்கள், சேவைகள் மீதான வரி | 2 | - | - | ඒසීඒ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானம், ஏனையவை | 4 | - | - | |
| **135,000,000,000.00** | **மொத்த வருமான பெறுகை (அ)** | | **121,028,522,046.00** | **115,417,028,272.00** | |
| - | **வருமானமில்லாத பெறுகை** | | - | - | |
| - | திறைசேரிக் கட்டுநிதி | | 642,541,411.00 | 752,175,000.00 | ඒසීඒ-3 |
| - | வைப்பு | | 225,970,311.00 | 299,009,574.00 | ඒසීඒ-4 |
| - | முற்பணக் கணக்கு | | 37,999,209.00 | 50,529,077.00 | ඒසීඒ-5∴5(ඒ)/5(ඕ) |
| - | ஏனைய பெறுகை | | 95,315,491.00 | 104,592,121.00 | |
| - | **மொத்த வருமானமில்லாத பெறுகை (ஆ)** | | **1,001,826,422.00** | **1,206,305,772.00** | |
| - | **மொத்த வருமானப் பெறுகையும் வருமானமல்லாத பெறுகையும் இ = (அ)+(ஆ)** | | **122,030,348,468.00** | **116,623,334,044.00** | |
| | **கழி : செலவு** | | | | |
| - | **மீண்டெழும் செலவினம்** | | - | - | |
| 846,500,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 805,327,903.00 | 723,371,911.00 | |
| 177,200,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 201,959,209.00 | 205,020,444.00 | ඒසීඒ-2(ஜை) |
| 9,500,000.00 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 8,235,451.00 | 8,409,221.00 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| **1,033,200,000.00** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **1,015,522,563.00** | **936,801,576.00** | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 17,800,000.00 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 15,512,876.00 | 6,288,020.00 | |
| 136,700,000.00 | மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல் | 11 | 107,829,775.00 | 94,056,258.00 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ඒසීඒ-2(ஜை) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 6,400,000.00 | கொள்ளளவைக் கட்டியெழுப்புதல் | 14 | 5,248,681.00 | 9,670,775.00 | |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | |
| **160,900,000.00** | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **128,591,332.00** | **110,015,053.00** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **120,903,703,982.00** | **115,650,132,007.00** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 210,106,606.00 | 531,522,103.00 | ඒසීඒ-4 |
| | செலுத்துகைகள் | | 120,662,711,195.00 | 115,059,294,194.00 | ඒසීඒ-5∴5(ඒ)/5(ඕ) |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 30,886,181.00 | 59,315,710.00 | |
| | **மொத்த செலவினம் எ = (ஈ + உ + ஊ)** | | **122,047,817,877.00** | **116,696,948,636.00** | |
| | | | | - | |
| **1,194,100,000.00** | **2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ஏ=(இ-எ)** | | **(17,469,409.00)** | **(73,614,590.00)** | |
| | **கட்டுநிதி சீராக்கல்கள்** | | | | |
| | **கூட்டு** | | | | |
| | நி.ஒ. 208 இன் படி ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் செலவினம் | | 51,314,150.00 | 46,550,631.00 | |
| | கட்டுநிதிக் கணக்கு பற்று வேறுபாடு சீராக்கல் | | 19,757,386.00 | 29,735,446.00 | |
| | கட்டுநிதிக் கணக்கு வரவு வேறுபாடு சீராக்கல் | | - | 45,475,137.00 | |
| | முற்பணம் பி கணக்கு வேறுபாடு சீராக்கல் | | - | 1,002,414.00 | |
| | **சீராக்கல்களின் மொத்தம்** | | **71,071,536.00** | **122,763,628.00** | |
| | **கழி** | | | | |
| | நி.ஒ. 208 இன் படி ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் செலவினம் | | 9,657,138.00 | 5,436,061.00, | |
| | **சீராக்கல்களின் மொத்தம்** | | 507,079.00 | - | |
| | **2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ஏ=(இ-எ)** | | **10,164,217.00** | **5,436,061.00** | |
| | **2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான சீராக்கல்களின் பின்பான கட்டுநிதி மீதி** | | **43,437,910.00** | **43,712,977.00** | |

### 3.2 இலங்கை மதுவரித் திணைக்களம் - மதுவரி வெகுமதி நிதியம்

**2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று (ரூபாவில்)**

| | 2020 | 2019 |
|---|---|---|
| **வருமானம்** | | |
| கூட்டுத் தண்டப்பணப் பெறுகை | 150,286,449.81 | 181,849,475.27 |
| சிகரட் தண்டப்பணம் | 6,003,900.00 | 4,442,250.00 |
| பெறவேண்டிய கூட்டுத் தண்டப்பணம் | - | 54,577,283.55 |
| பெறவேண்டிய சிகரட் தண்டப்பணம் | - | 871,100.00 |
| **மொத்த வருமானம்** | **156,290,349.81** | **241,740,108.82** |
| | | |
| **செலவினம்** | | |
| வெகுமதி நிதியக் கொடுப்பனவு | 120,589,193.59 | 363,518,332.51 |
| அரசிறை வருமானத்திற்கு செலுத்துகை - மொத்த வருமானம் 15 % | 22,542,967.47 | 27,277,421.29 |
| அரசிறை வருமானத்திற்கு செலுத்துகை - சிகரட் தண்டப்பணம் 75 % | 4,502,925.00 | 3,331,687.50 |
| புகையிலை வெகுமதி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை | 1,401,700.00 | 1,110,562.50 |
| புகையிலை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை (பெறப்பட வேண்டிய கூட்டு, சிகரட் தண்டங்களில்) | 118,500.00 | |
| விசேட சுற்றிவளைப்புகள் | - | 210,000.00 |
| ஏனையவை | 11,300.00 | - |
| மதிப்பிறக்கம் ( அட்டவணை 01) | - | 6,601,350.14 |
| உரிமதாரர்களிற்கு மீள கொடுப்பனவு | 65,000.00 | 102,000.00 |
| **மொத்தச் செலவினம்** | **149,113,086.06** | **402,151,353.94** |
| | | |
| **(குறை ) / மிகை** | **7,177,263.75** | **(160,411,245.12)** |

## 3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று

**2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான**

**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை 2020 ரூ. | 2019 ரூ. |
|---|---|---|---|
| **நிதி அல்லாத சொத்து** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசிஏ-6 | 1,458,969,403.00 | 1,371,338,801.00 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசிஏ-5/5(ஏ) | 170,494,920.00 | 177,607,948.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசிஏ-3 | 43,437,910.00 | 43,712,977.00 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,672,902,233.00** | **1,592,659,726.00** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| தேறிய சொத்துகள் | | (190,944,818.00) | (167,943,085.00) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,458,969,403.00 | 1,371,338,801.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசிஏ-5(பி) | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசிஏ-4 | 361,439,738.00 | 345,551,033.00 |
| கட்டுநிதி மீதி | ஏசிஏ-3 | 43,437,910.00 | 43,712,977.00 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,672,902,233.00** | **1,592,659,726.00** |

பக்க இலக்கம் 05 முதல் 42 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 43 முதல் 59 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி) |
| பெயர் : எஸ்.ஆர்.ஆட்டிகல | பெயர் : எம்.ஜே.குணசிறி | பெயர்: எம்.என்.பி.பெர்னான்டோ |
| பதவி: செயலாளர் | பதவி: மதுவரி ஆணையாளர் நாயகம் | |
| திகதி : **2021.02.20** | திகதி : **2021.02.16** | திகதி : **2021.02.16** |

# 3.4 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசிஏ-சி

**2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான**
**நிதிப் பாய்ச்சற் கூற்று**

| | உண்மை 2020 ரூ. | உண்மை 2019 ரூ. |
|---|---|---|
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | 121,028,522,046.00 | 115,417,028,272.00 |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 94,204,670.00 | 104,592,121.00 |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 19,757,386.00 | 75,210,583.00 |
| ஏனைய திணைக்களங்களின்.'. அமைச்சுக்களின் மூலம் திரட்டப்படுகின்ற வருமானம் | - | - |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 642,541,411.00 | 752,175,000.00 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **121,785,025,513.00** | **116,349,005,976.00** |
| <u>**கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு**</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 1,014,775,453.00 | 935,818,716.00 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | - | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 9,657,138.00 | 5,436,061.00 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 120,662,711,195.00 | 115,059,294,194.00 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | **121,687,143,786.00** | **116,000,548,971.00** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **97,881,727.00** | **348,457,005.00** |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரித்து அகற்றல் ஏற்பாடு, பௌதீகச் சொத்துகளின் விற்பனை | 1,110,821.00 | - |
| உபகரணங்களிலிருந்து அறவிடப்பட்டவை | - | - |
| முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை | 32,413,702.00 | 44,049,500.00 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **33,524,523.00** | **44,049,500.00** |
| <u>**கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:**</u> | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 78,024,292.00 | 64,447,282.00 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 25,807,753.00 | 51,833,719.00 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **103,832,045.00** | **116,281,001.00** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(70,307,522.00)** | **(72,231,501.00)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **27,574,205.00** | **276,225,504.00** |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| கிடைக்கப்பெற்ற வைப்புகள் | 225,970,311.00 | 299,009,574.00 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **225,970,311.00** | **299,009,574.00** |
| **கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புகளின் கொடுப்பனவு | 210,106,606.00 | 531,522,103.00 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **210,106,606.00** | **531,522,103.00** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **15,863,705.00** | **(232,512,527.00)** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)** | **43,437,910.00** | **43,712,977.00** |
| **ஜனவரி 01 ஆம் திகதியன்று ஆரம்பக் காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **43,437,910.00** | **43,712,977.00** |

### 3.5 நிதியியற் கூற்றுக் குறிப்புகள்

### 3.6 வருமானம் சேகரித்தற் செயலாற்றுகை

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீடு % இல் |
| 1002.04.01 | மதுபானம் | 130,000,000,000.00 | 130,000,000,000.00 | 120,989,956,654.00 | 93.07% |
| 1002.06.00 | புகையிலை வரி | 35,000,000.00 | 35,000,000.00 | 38,565,392.00 | 110.19% |
| 2002.01.01 | அரச கட்டடங்களின் வாடகை | 650,000.00 | 650,000.00 | 1,014,759.00 | 156.12% |
| 2002.02.99 | ஏனைய வட்டி | 6,000,000.00 | 6,000,000.00 | 5,194,264.00 | 86.57% |
| 2003.01.00 | திணைக்கள விற்பனை | 1,000,000.00 | 1,000,000.00 | 1,110,821.00 | 111.08% |
| 2003.02.99 | நானாவித | 20,000,000.00 | 20,000,000.00 | 49,938,665.00 | 249.69% |
| 2004.0.1.0.0.0 | சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு நிதி – மத்திய அரசாங்கம் | - | - | 38,056,983.00 | - |

### 3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாட்டை இறுதி ஏற்பாட்டுத் தொகையின் % ஆக |
|---|---|---|---|---|
| | அசல் ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| மீண்டெழும் | 1,033,200,000.00 | 1,033,200,000.00 | 1,015,522,563.00 | 98.29% |
| மூலதனம் | 160,900,000.00 | 160,900,000.00 | 128,591,332.00 | 79.92% |

### 3.8 நி.ஒ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

| தொடரில. | ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைச்சு/ திணைக்களம் | ஏற்பாட்டின் நோக்கம் | ஏற்பாடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாட்டை பெறப்பட்ட இறுதி ஏற்பாட்டின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| 01. | கட்டடத் திணைக்களம் (309) | கட்டட நிர்மாணம் | 23,325,849.62 | 23,325,849.62 | 23,324,585.23 | 99.99 |
| 02. | கட்டடத் திணைக்களம் (309) | கட்டடம் புதுப்பித்தல் | 9,745,000.00 | 9,745,000.00 | 1,565,000.00 | 16.06 |
| 03. | மாவட்ட செயலாளர் கம்பஹா (256) | கட்டட நிர்மாணம் | 15,562,999.20 | 15,562,999.20 | 15,504,844.85 | 99.62 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **04.** | மாவட்ட செயலாளர் கம்பஹா (256) | கட்டடம் புதுப்பித்தல் | 742,726.40 | 742,726.40 | 724,373.90 | 97.52 |
| **05** | மாவட்ட செயலாளர் களுத்துறை (257) | கட்டடம் புதுப்பித்தல் | 1,483,076.97 | 1,483,076.97 | 1,482,631.89 | 99.96 |
| **06** | மாவட்ட செயலாளர் காலி (261) | கட்டடம் புதுப்பித்தல் | 3,900,000.00 | 3,900,000.00 | 3,900,000.00 | 100 |
| **07.** | மாவட்ட செயலாளர் பொலன்னறுவ (275) | கட்டட நிர்மாணம் | 1,986,785.54 | 1,986785.54 | 1,986,785.54 | 100 |
| **08.** | மாவட்ட செயலாளர் மாத்தறை(262) | கட்டட நிர்மாணம் | 576,726.00 | 576,726.00 | 576,726.00 | 100 |
| **09.** | மாவட்ட செயலாளர் அம்பந்தோட்டை (263) | கட்டட நிர்மாணம் | 1,553,304.21 | 1,553,304.21 | 1,502,092.70 | 96.70 |
| **10.** | புகையிரதத் திணைக்களம் (306) | இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டு | | | 747,110.00 | |

### 3.9 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

| **சொத்துக்களின் குறியீடு** | **குறியீட்டு விபரம்** | **31.12.2020 திகதிய பொருட் கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் மீதி** | **31.12.2020 திகதிய நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் மீதி** | **எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியவை** | **வளர்ச்சி % ஆக அறிக்கையிடல்** |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்களும் அமைப்புகளும் | 378,308,636.90 | 378,308,636.90 | | 100% |
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 640,338,949.35 | 640,338,949.35 | | 100% |
| 9153 | காணிகள் | 184,800,000.00 | 184,800,000.00 | | 100% |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துகள் | 3,400,000.00 | 3,400,000.00 | | 100% |
| 9155 | உயிரியல் சொத்துகள் | - | - | | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | 174,869,318.22 | 174,869,318.22 | | 100% |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகள் | 77,252,499.00 | 77,252,499.00 | | 100% |

## 3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

**இலங்கை மதவரித் திணைக்களத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான நிதியியற் கூற்றுகள் தொடர்பில் 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

1. **நிதியியற் கூற்றுகள்**

**1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியன்று முடிவுற்ற நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சற் கூற்று என்பவற்றினை உள்ளடக்கிய 2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான நிதியியற் கூற்றுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பின்னர் சமர்ப்பிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பாக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட

ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின்போது தொழில்சார் தீர்ப்புகள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும் என்னால்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்குகையில், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்படுகிறது. தவறுகளை சுட்டிக்காட்டுவதால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்க பூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை தெரிவிப்பதாக கருதவில்லையாயினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய அறிவொன்று பெறப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படைத்தன்மையை உள்ளடக்கிய நிதிக் கூற்றுகள் ஒட்டுமொத்தமாக சமர்ப்பிக்கப்பட்டமையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

## 1.5. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.
(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதையும்,
(ஆ) இவ்வறிக்கையின் 1.6.2.1(அ) மற்றும் (இ) பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகள் தொடர்பில் முன்னைய வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அறிக்கையில் காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

நிதிக் கூற்றுகளின் மாதிரியின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுப் பகுதியில் சிங்களப் பிரதியில் 10 சந்தர்ப்பங்களிலும் ஆங்கிலப் பிரதியில் 06 சந்தர்ப்பங்களிலும் தமிழ் பிரதியில் 08 சந்தர்ப்பங்களிலும் நிரல்களின் பெறுமானங்களை வேறாக குறிப்பிட்டிருத்தல், நிரல்களின் மொத்தத்தை தவறாகக் காட்டியிருத்தல், பெறுமானங்களை மாற்றி குறிப்பிட்டிருத்தல் மற்றும் பெறுமானங்கள் குறிப்பிடப்படாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.6.1.1. வருமானப் பெறுகைகள்

2020 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதிக் கூற்றுகளின் பிரகாரம் புகையிலை வரி வருமானம் ரூ.38,565,392 ஆக இருப்பினும் திணைக்களத்தின் வருமானப் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் மீளாய்வு வருடத்தின் புகையிலை வரி வருமானம் ரூ. 32,140,567 எனக் காட்டப்பட்டதனால் ரூ. 6,424,825 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.6.1.2. உறப்பட்ட செலவினம்

திணைக்களத்தின் தலைமை அலுவலக நிர்மாணத்தின் பொருட்டு ஆலோசகர் சேவையை வழங்கிய கட்டடத் திணைக்களத்திற்குரிய ஆலோசனைக் கட்டணச் செலவு ரூ.7,286,343 இனை 248-1-1-2104 ஆம் இலக்க செலவு விடயத்தில் செயற்பாட்டிலுள்ள வேலையாக கணக்கிடப்பட்டிருப்பினும் அதற்கிணங்க 2020 டிசம்பர் 31 ஆம் திகதிய 7041628 ஆம் இலக்க காசோலையை அந்நிறுவனத்திற்குக் கையளிக்காமல் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு எவ்வித காரணமும் காட்டப்படாமல் வைத்திருந்த பின் ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

### 1.6.2. நிதி நிலைமைக் கூற்று

1.6.2.1. நிதியல்லாச் சொத்துகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிய சொத்துகளின் தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் (SA-80) இனது பெறுமதி திறைசேரி முத்திரையிடப்பட்ட கூற்றுகளின் பிரகாரம் ரூ.1,458,163,820 ஆக இருந்ததுடன் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் அது ரூ. 1,458,969,403 ஆக இருந்தமையால் ரூ. 805,583 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வு வருடத்தின் நிதிக் கூற்றுகளின் ஏ.சி.ஏ.2.(ii) மாதிரிப் படிவத்தின் 248-1-1-2104 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் கட்டட நிர்மாணத்தின் பொருட்டு திணைக்களத்தினாலும் ஏனைய திணைக்களங்களினாலும் செய்யப்பட்ட செலவுகள் முறையே, ரூ. 30,055,474 மற்றும் ரூ. 42,895,034 ஆக இருப்பினும் ஏ.சி.ஏ.6 நிதியல்லாச் சொத்துகளின் கூற்றில் மீளாய்வு வருடத்தின் போது அலுவலகக் கட்டடங்களை கையகப்படுத்தலில் ரூ. 30,055,474 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூ. 42,895,034 பெறுமதியுடைய கட்டடங்கள் கையகப்படுத்தல் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வு வருடத்தின் ஜனவரி 01 ஆம் திகதியன்று நிதியல்லாச் சொத்துகள் பற்றிய கூற்றின் ஏ.சி.ஏ.6 மாதிரியின் பிரகாரம் செயற்பாட்டிலுள்ள வேலைகளின் பெறுமதியாக, 2019 ஜனவரி 01 ஆம் திகதியன்று செயற்பாட்டிலுள்ள வேலைகளின் பெறுமதியாக அறிக்கையிடப்பட்ட ரூ. 165,062,650 மீதியை அவ்வாறே காட்டப்பட்டிருந்தது. அதன்படி, 2019 இன் செயற்பாட்டிலுள்ள வேலைகளின் பெறுமதியான ரூ.45,567,771 இனை ஏ.சி.ஏ.6 மாதிரியில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3. வைப்புக் கணக்கு மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016, 2017 வருடங்கள் முதல் தலைமை அலுவலகத்தின் நிர்மாணத்தின் பொருட்டு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய ரூ. 9,946,304 பிடித்துவைத்தல் தொகையை பொது வைப்புகளில் வைக்கப்பட்டிருந்தது. கட்டடத்தின் நிர்மாணம் மற்றும் திட்டமிடல்களை சரியாக கையளிக்காமை, நிர்மாணத்தில் தவறுகள் இருத்தல் மற்றும் ஒப்பந்த மேற்பார்வை

மேற்கொண்ட நிறுவனத்தால் அதற்கான முறையான நடவடிக்கை எடுக்காமை போன்ற பிரச்சனைகள் இதற்கான காரணங்களாக இருந்தன. இப்பிரச்சனைகளைத் தீர்த்து, கணக்குகளிற்குத் தேவையான சீராக்கல்களைச் செய்வதற்கு மீளாய்வு வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6000-0-0-18-0-119 ஆம் இலக்க நிலையியற் கொடுப்பனவின் பொருட்டு தற்காலிக பிடித்து வைத்தல் கணக்கின் 2 வருடத்திற்கு மேற்பட்ட 2 கொடுப்பனவுகளின் மொத்தமான ரூ.7,098 தொடர்பில் நி.ஒ.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.4. நிதிப் பாய்ச்சற் கூற்று**

மீளாய்வு வருடத்தின் 7041629 ஆம் இலக்க வங்கிக் கணக்கின் மீதி ரூ. 25,273,363 ஆக இருந்த போதிலும் நிதிப் பாய்ச்சற் கூற்றில் அது ரூ. 43,437,910 எனக் காட்டப்பட்டிருந்தது.

**1.6.5. கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

6000-0-0-18-0-122-0 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2018 முதல் 2020 வரை ரூ. 73,346,404 வைப்பிற்கான அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.6. பதிவேடுகள், புத்தகங்கள் பேணப்படாமை**

இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் மீளாய்வு வருடத்திற்கான கீழே காட்டப்பட்ட ஏடுகள் முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்படவில்லை என மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

| ஏடுகளின் வகை | உரிய ஒழுங்குவிதி | அவதானிப்பு |
|---|---|---|
| செலவுப் பதிவேடு | நி.பி.447 | நாளது வரையாக்கப்படாமை |
| சேதங்கள், இழப்புகள் பதிவேடு | நி.பி.505(2) | நாளது வரையாக்கப்படாமை |
| நிலையான சொத்துகள் பதிவேடு | நி.பி.110 | நாளது வரையாக்கப்படாமை |
| பிணைப் பொறுப்புப் பதிவேடு | நி.பி.880 | பேணப்படாமை |

**2. நிதி மீளாய்வு**

**2.1.1. கட்டுநிதிக் கணக்கு மீதி**

2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று திறைசேரிக்கு தீர்க்கப்படாத ரூ.43,437,909 கட்டுநிதி மீதி காணப்பட்டது.

**2.1.2. அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பி" கணக்குகள்**

இறந்த 09 அலுவலர்களது நிலுவைக் கடன் மீதி ரூ. 1,636,743 ஆக இருந்ததுடன் அதில் ஒருவரிடமிருந்து ரூ. 118,260 நிலுவைக் கடன் 5 வருடங்களிற்கும் மேலாக நிலுவையில் காணப்பட்டது. மேலும், சேவை நீக்கப்பட்ட, இராஜினாமாச் செய்த, சேவையிலிருந்து நீங்கிய 11 அலுவலர்களிடமிருந்து ரூ. 1,157,797 நிலுவைக் கடனாக காணப்பட்டதுடன் அதில் 7 அலுவலர்களின் மொத்தத் தொகை ரூ. 543,723 நிலுவைக் கடன் 05 வருடத்திற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டது. இக்கடனை அறிவிடுவதற்கு தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரமும் 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரமும் மீளாய்வு வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அது பற்றிய பின் தொடர் நடவடிக்கை மோசமான மட்டத்தில் காணப்படுகிறதெனவும் அவதானிக்கப்பட்டது.

**2.2. நிலுவை வருமானம் அறவிடாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுகள் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று மதுபானங்கள், கள்ளு மற்றும் மதுசார உற்பத்திகளுக்கு ஏற்ப திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய மொத்த நிலுவை வரி வருமானம் மற்றும் அதற்குரிய தாமதக் கட்டணம் அடங்கலாக மொத்த நிலுவை வருமானம் ரூ. 3969.8 மில்லியன் ஆகும். நி.பி.176(2), (3) இன் பிரகாரம் அந்நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு வருடத்தின் கடைசித் திகதியன்று 05 மதுபான உற்பத்திக் கம்பனிகளிற்கு அமைவாக 5 வருடத்திற்கு மேலான நிலுவை வரி வருமானம் ரூ. 2,299.63 ஆக காணப்பட்டது. அதில் அடங்கிய ஆரம்ப வரித் தொகை ரூ.360.61 மில்லியனாக இருந்ததுடன் தாமதக் கட்டணம் ரூ.1939.02 மில்லியனாகவும் இருந்தது. 02 கம்பனிகளிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமான மொத்தம் ரூ.1,217.12 மில்லியன் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ரூ.204.97 மில்லியன் நிலுவை வருமானத்தை அறவிட வேண்டிய கம்பனி ஒன்றிற்கு சலுகையை வழங்கத் திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் இணக்கத்துடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்கு அமைச்சிற்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்ட போதிலும், அதன்படி நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய இரு கம்பனிகளின் மொத்தம் ரூ. 877.54 மில்லியன் நிலுவை வருமானத்தை அறவிடுதல் சம்பந்தமான முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

(இ) நி.பி.128(2) இற்கிணங்க, நிலுவை வருமானம் பற்றிய நிலையைக் காட்டும் அரையாண்டு அறிக்கையொன்று ஒவ்வொரு 06 மாதங்களிற்கொரு முறை 06 மாத முடிவில் வரும் மாதத்தின் இறுதித் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும் 2020 இன் இறுதி அரையாண்டிற்கான அறிக்கை 2021 ஜனவரி 31 வரையிலும் கணக்காய்விற்குக் கிடைக்கப் பெறவில்லை.

### 2.3. செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 செலவு விடயங்களின் மொத்தம் ரூ.116.6 மில்லியன் ஏற்பாட்டினை திட்டமிட்ட போதிலும் அச்செலவு விடயங்களிற்கு ஏற்ப திட்டமிட்ட ஏற்பாடுகளிலிருந்து ரூ.83.8 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவு விடயங்களின் மீதி, திட்டமிட்ட தேறிய ஒதுக்கீட்டின் 17% முதல் 92% வரையில் இருந்தது.

(ஆ) வரி கணிப்பீட்டு செயன்முறையை சரிசெய்யும் பொருட்டு கணனி மென்பொருள் முறையொன்றை நிறுவுவதற்கு மீளாய்வு வருடத்தில் செலவு விடயம் 248-1-1-2106 இன் கீழ் இருந்த ரூ.15 மில்லியன் ஒதுக்கீட்டிலிருந்து ரூ.3.4 மில்லியனை தொடர்ச்சியான மின் வழங்கல் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூ.11.6 மில்லியன் ஒதுக்கீட்டை நி.ஒ.66 இன் கீழ் 248-1-1-2108 ஆம் இலக்க செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 2.4. பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவுத் தலைப்பு 130 இற்குரிய தலைமை அலுவலகம் மற்றும் 2 மாவட்டங்களில் இணைக்கப்பட்டுள்ள பயிலுனர்கள் பொருட்டு செலுத்த வேண்டிய ரூ. 420,000 கொடுப்பனவை மதுவரித் திணைக்களம் செலவுத் தலைப்பு 248 இன் கீழ் பொறுப்பாகக் காட்டியிருந்தது.

(ஆ) மீளாய்வு வருடத்திற்குரிய 12 மீண்டெழும் செலவு விடயங்களுக்குரிய மொத்தம் ரூ. 1,226,942 ஆகவுள்ள 22 பொறுப்புகளை பொறுப்புகள் பதிவேட்டில் காட்டப்படவில்லை.

(இ) 2019 டிசம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம், குறிப்பு இல (iii) இன் கீழ் அறிக்கையிடப்படாத பொறுப்பு அல்லது கடப்பாடு ஒன்றை முன்னைய வருட செலவாக வரும் வருடத்தில் தீர்த்து வைக்கப்படவில்லையாயினும் 2019 இல் அவ்வாறு அறிக்கையிடப்படாத 15 சந்தர்ப்பங்களிற்கு ஏற்ப மொத்தம் ரூ. 4,898,437 இனை மீளாய்வு வருடத்தில் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஈ) அடுத்த வருடத்திற்கு செலுத்த வேண்டிய 5 செலவுகளின் மொத்தம் ரூ. 127,023 ஐ மீளாய்வு வருட பொறுப்புகள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது.

### 2.5. கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்து பேணி வருகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியுள்ளதுடன் அம்முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அம்மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கவும் வேண்டியிருந்தது. எனினும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமை பற்றி கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவையானவாறு உரிய காலத்தினுள் சகல கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் பதில்கள் வழங்குதல் இடம்பெறுகின்றது என்பது கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்காமை இடம்பெற்றுள்ளது.

(இ) உள்ளகக் கணக்காய்வின் பணியை முறையாக செயற்படுத்துவதற்கு வினைத்திறனான முறையொன்று உள்ளதென கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட அவதானிப்பின் படி அத்தேவைப்பாட்டை நிறைவேற்றப்படவில்லை.

## 2.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** |
|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி.395(இ) | ஒவ்வொரு மாதத்திலுமுள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை பற்றி அதற்கடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை தயாரிக்க வேண்டிய போதிலும் மீளாய்வு வருடத்தில் 02 வங்கிக் கணக்குகளிற்கு உரிய 5 கணக்கிணக்கக் கூற்றுகள் கணக்காய்வுப் பரிசீலனைத் திகதியான 2021 ஜனவரி 20 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி.104(4) | நட்டங்கள் சேதங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் இடம்பெறுமாக இருந்தால் நிதிப் பிரமாணம் 104(7) இன் பிரகாரம் தொடக்க அறிக்கையும் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் சேதங்கள் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 748,907 தொகையான நட்டங்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாத 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன |
| (இ) | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கைச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வருமானக் குறியீட்டிற்கான மாதாந்த அறிக்கையானது அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க நிதிக்கொள்கைகள் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |
| (ஈ) | 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதி, நி.பி.756(6). | மீளாய்வு வருடத்திற்கான பொருட் கணக்கெடுப்பு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2021 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அடங்கலாக 13 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்கள், 30 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள் மற்றும் 06 விசேட நடவடிக்கைப் பிரிவுகள் உள்ளடங்கலாக 56 மதுவரி நிலையங்களிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி, நி.பி.31, நி.பி.880 மற்றும் அரசாங்க அலுவலர்களின் பிணைப்பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரம் | அரசாங்க நிதி சம்பந்தமான பொறுப்புடைமை மற்றும் பாதுகாப்பு தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் ஒவ்வொரு திணைக்களத் தலைவரினாலும் பிணைப்பொறுப்பு வைத்திருக்க வேண்டுமெனக் காட்டப்பட்ட போதிலும் மதுவரித் திணைக்களத்தினால் மீளாய்வு வருடம் வரையில் அவ்வாறு பிணைப்பொறுப்பு வைத்திருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வு வருடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூ. 130 பில்லியன் மதுபான வரி வருமானம் மற்றும் ரூ. 35 மில்லியன் புகையிலை வரி வருமானம் என்பன பற்றிய மாதாந்த இலக்கு, இவ்விலக்கை அடைவதற்கான நடவடிக்கைகள், அந்நடவடிக்கைகளின் முன்னேறத்தை அளவிடுவதற்கான சுட்டெண் அடங்கலாக வருமானத்தை அறவீடு செய்யும் செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.7. வங்கிக் கணக்குச் செயற்பாடுகள்

7041628 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்குரிய மீளாய்வு வருடத்தின் டிசம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கத்தில் வெளியிடப்பட்ட ஆனால் 6 மாதத்திற்கு மேற்பட்ட காலக் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத பெறுமதி ரூ.242,823 உள்ள 26 காசோலைகள் தொடர்பில் நி.பி.396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றுகை

### 3.1.1. தொலைநோக்கு மற்றும் செயல்நோக்கு

மதுவரித் திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் பிரதான பணிகள், சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களின் விடயப் பரப்பின் கீழும் வருவதனால் மதுவரித் திணைக்களத்தின் விடயப் பரப்பை சரியாக இனங்கண்டு அதற்கு ஏற்ற முறையில் நோக்கங்கள் மற்றும் பணிகளைத் திருத்தஞ் செய்து பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் கவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் சகல பணியாளர்களுடன் அவர்களது கருத்து மற்றும் யோசனைகளைக் கேட்டு கலந்துரையாடி, திருத்த வரைவு தயாரிக்கப்பட்ட போதிலும் இதுவரை அங்கீகாரம் பெறப்படவில்லை.

### 3.1.2. கடப்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலாப் படகுச் செயற்பாடுகள் பொருட்டான மதுவரி உரிமங்கள்

சுற்றுலாச் சேவையின் கீழ் ‘‘சுற்றுலா படகு செயற்பாடுகள்’’ சேவைகளுக்காக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்படாத தனிப்பட்ட கம்பனியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற 8 படகுகளுக்காக வெ.ம. 11 மதுவரி உரிமத்தினை (உணவுச் சாலை உரிமம்) வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கிணங்க 5 படகுகள் வரையறுத்த வியாபார மற்றும் கடல்சார் கம்பனியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. பதிவு செய்தல் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்ட படகுகளில் இரண்டு படகுகளின் காலம் 2019 பெப்ரவரி 11 ஆந் திகதியும் 2019 மே 02 ஆந் திகதியும் முடிவடைந்திருந்தது. வரையறுத்த வியாபார மற்றும் கடல்சார் கம்பனியின் கீழ் வியாபார கடல்சார் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக இப் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. சுற்றுலா படகுச் செயற்பாட்டிற்காக மதுவரி உரிமங்களை வழங்குவதற்கு உரிய மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விதிகளை உருவாக்குவதும் திணைக்களங்களால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதுகாப்பு ஸ்ரிக்கர் முகாமை முறைமை

அரசாங்க வருமானத்தை அதிகரிப்பதற்காக மதுபானப் போத்தல்கள் மற்றும் மதுபானப் போத்தல் சார்ந்த உற்பத்திகளுக்காக பாதுகாப்பு ஸ்டிக்கர்களை வழங்குதல் மற்றும் பாதுகாப்பு ஸ்டிக்கர் முகாமைத்துவ முறைமையை வழங்குதல் மற்றும் ஸ்தாபித்து பராமரிப்பதற்காக 2019 யூன் 20 ஆம் திகதிய 2128/30 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமும் மதுவரி அறிவித்தல் 04/2019 இனாலும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியின் கீழ் 2019 யூலை 20 முதல் வெளிநாட்டு மதுபானங்களிற்கு ஸ்ரிக்கர் ஒட்டுதல் ஆரம்பமாகியிருந்தது. நிதி அமைச்சினால் 2019, 2020 வருடங்களில் வெளியிடப்பட்ட 04 மதுவரி அறிவித்தல்களின் ஊடாக உள்நாட்டு மதுபானங்களிற்கு ஸ்டிக்கர் ஒட்டுதல் பொருட்டு 2021 யூன் 30 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2019 முதல் மீளாய்வு வருட இறுதி வரை வெளிநாட்டு மதுபானங்களிற்கு ஸ்டிக்கர் ஒட்டுதலின் ஊடாக ரூ. 10.87 மில்லியன் வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் ஸ்டிக்கர் கொள்வனவின் பொருட்டு அக்காலத்திற்கு ரூ. 5.98 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. இவ்வேலைத்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவினம் ரூ. 1,782 மில்லியனாக இருப்பினும் இது வரையான செலவு ரூ. 5.98 மில்லியன் அதாவது 0.3 சதவீதம் மாத்திரமே. இவ்வேலைத்திட்டம் தற்போது வெளிநாட்டு மதுபானங்களிற்கு மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

உள்நாட்டு மதுபானங்களின் பொருட்டு கம்பனிகளுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு 18 மாத காலம் எடுத்திருத்தல், பிரதான உற்பத்தி நிறுவனங்களால் டிஜிட்டல் தொழில்நுட்ப முறையை செயற்படுத்தும் தேவைப்பாட்டைச் சுட்டிக் காட்டியிருத்தல், புதிய அமைச்சரவை அனுமதி பெறப்பட வேண்டியிருத்தல், வழங்குனர்களுடன் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது பாதுகாப்பு ஸ்டிக்கர் பெறுதலின் பிரகாரம் என்பதன்படி புதிய பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளும் தேவைப்பாட்டை ஆரம்பித்தல், அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுகை நடவடிக்கைகளின் விடயப் பரப்பை திருத்தஞ் செய்தல் மற்றும் புதிய

உடன்படிக்கைகளச் செய்தல் போன்ற தேவைப்பாடுகள் மேலும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

(இ) கணனி மென்பொருள் முறைமை

திணைக்களத்தின் மதுவரி வருமானம் கணிக்கும் செயன்முறையை சரியாக செய்வதற்கு கணனி மென்பொருள் முறை ஒன்றை செயற்படுத்தும் பொருட்டு திணைக்களத்தினால் 2016 முதல் 2018 வரை வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் குறைநிரப்பு ஒதுக்கீடுகளின் ஊடாக ரூ.87.2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பொருட்டு 2019 இற்காக ரூ. 0.745 மில்லியன் மற்றும் மீளாய்வு வருடத்தில் ரூ. 3.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் வரி கணிக்கும் செயன்முறையை சரியாக செய்வதற்கு பிரேரிக்கப்பட்ட கணனி மென்பொருள் முறையின் எதிர்பார்த்த நோக்கம் இது வரை நிறைவேற்றப்படவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இணைந்த கணனித் தரவுத்தளம்

சுங்கத் திணைக்களத்தையும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தி கணனித் தரவுத்தளத்தைத் தயாரித்தல், விரைவில் செயற்படுத்துதல், அதுவரை கடிதப் பரிமாற்றத்தை மேற்கொள்ளல் என்பவற்றின் ஊடாக இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துமாறு 2019, 2020 களில் பொதுக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டங்களில் குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அது பற்றி பரிசீலனையின் போது மதுவரித் திணைக்களம் உரிய நிறுவனங்களுடன் இணைந்து கணனி தரவு முறை தயாரித்தலில் புதிய வெட்டுமுகத்தின் கீழ் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானப் பொறியியலாளர்களினது ஆலோசனைச் சேவையை பெறுவதற்கு உரிய கட்டணத்தைச் செலுத்தும் நிதியியல் யோசனை மதிப்பீட்டு மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) கட்டடத் திணக்களத்திற்கு ஒதுக்கீட்டை விடுவித்தலின் பின்னர் அவர்களின் மேற்பார்வை மற்றும் நெறியாளுகையின் கீழ் பிராந்திய அலுவலகங்களில் நிர்மாணிப்பு, தனிப்பட்ட ஒப்பந்தகாரர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2019 இன் செலவினத்துடன் ஒப்பிடுகையில் அம்பாறை நிர்மாண வேலைத்திட்டத்தில் மீளாய்வு வருடத்தின் போது எந்தவொரு அடிப்படை முன்னேற்றமும் காணப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. அது 2018 ஜனவரி 15 ஆம் திகதி முடிவுறுத்த வேண்டியிருப்பினும் 03 வருடம் கடந்த நிலையிலும் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு நிர்மாண வேலைத்திட்டங்கள் முறையே 2020 ஏப்ரல் 14 மற்றும் 2020 பெப்ரவரி 08 ஆம் திகதிகளில் பூர்த்தி செய்ய வேண்டியிருப்பினும் மீளாய்வு வருடத்தின் கடைசித் தினத்தன்று அடிப்படை முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. மதுவரித் திணைக்களத்தின் மேற்படி வேலைத்திட்டத்தின் மேற்பார்வைப் பணிகளின் பொருட்டு தொழில்நுட்ப அலுவலர் ஒருவரை நியமித்தல் மீளாய்வு வருடத்தின் இறுதி வரை நடைபெற்றிருக்கவில்லை.

(ஊ) திணைக்களத்தின் வசமுள்ள காணிகள் மற்றும் கட்டடங்கள்

காணி பற்றிய பதிவேட்டின் பிரகாரம் திணைக்களத்தின் வசம் அலுவலகங்கள் அமைந்துள்ள 43 காணிகள் காணப்பட்டதுடன் அதில் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி அடங்கலாக 23 காணிகளிற்கு உரிய சிக்கலற்ற காணி உறுதிகள் பெற்றுக் கொள்ளும் அல்லது அரச காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இது வரை முடிவடைந்திருக்கவில்லை.

### 3.1.3. மதுவரி வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு வருடத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மதுவரி வருமானமான ரூ. 130 பில்லியன் உடன் ஒப்பிடுகையில் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் (நிலுவை வருமானம் அடங்கலாக) ரூ.120.9 பில்லியன் ஆக இருந்ததுடன் அது மதிப்பிடப்பட்ட மதுவரி வருமானத்தின் 93.07 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) 2014 முதல் 2020 வரை சேகரிக்கப்பட்ட தேறிய மதுவரி வருமானத்தின் அதிகரிப்பு/ குறைவு பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருடம் | மதுவரி வருமானம் ரூ.பில்லியன் | சதவீத வேறுபாடு |
|---|---|---|
| 2014 | 69.08 | 4.6 |
| 2015 | 105.2 | 52.2 |
| 2016 | 120.2 | 14.2 |
| 2017 | 113.2 | (5.8) |
| 2018 | 113.8 | 0.5 |
| 2019 | 115.3 | 0.3 |
| 2020 | 120.9 | 4.8 |

**3.1.4. புகையிலை வரி வருமானம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 முதல் 2020 வரையான காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை வரி வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | புகையிலை வரி வருமானம் | | |
|---|---|---|---|
| | உள்நாட்டு உற்பத்தி–தேறிய ரூ. | இறக்குமதி செய்த புகையிலை-தேறிய ரூ. | மொத்தம் ரூ. |
| 2020 | 17,441,567 | 14,699,000 | 32,140,567 |
| 2019 | 22,837,952 | 9,963,584 | 32,801,536 |
| 2018 | 21,587,211 | 12,704,726 | 34,291,937 |
| 2017 | 19,306,806 | 16,361,400 | 35,668,206 |
| 2016 | 27,076,026 | 6,250,121 | 33,326,147 |
| 2015 | 31,414,310 | 2,635,690 | 34,050,000 |
| 2014 | 28,064,210 | 4,377,420 | 32,441,630 |

(ஆ) புகையிலை வரிச் சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடப்படாமை

1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து சுருட்டுக்கள், பீடிகள் மற்றும் அனைத்து குழாய் புகையிலை ஒரு கிலோ கிராமிற்காக வரி விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும், உற்பத்தி செய்யப்படுகின்ற சுருட்டு மற்றும் பீடி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறான வரி அறவிடப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் 536 பீடி மற்றும் சுருட்டு உற்பத்தி நிறுவனங்களுக்கு அண்மித்த அளவானவர்கள் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டிருந்தனர். கடந்த 4 ஆண்டு காலத்தில் அந்நிறுவனங்களில் பீடி மற்றும் சுருட்டு உற்பத்தியானது அண்ணளவாக 16 பில்லியன் அளவிலானதாகும். அந்நிறுவனங்களிடமிருந்து தற்போது விண்ணப்பப் படிவக் கட்டணங்கள், பீடி உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தல் உரிமக் கட்டணங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட புகையிலையின் பொருட்டு உரிய வரித் தொகை என்பன மாத்திரம் அறவிடப்படுகிறது. கடந்த வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 நிறுவனங்களின் மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் பிரகாரம் 31,348,500 அலகுகளாக இருந்தது. அதன் படி மீளாய்வு வருடத்தில் பதிவு செய்யப்பட்ட 536 நிறுவனங்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் வருடாந்தம் அரசிற்கு அவ்வுற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கணிசமான அளவிலான வரி வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

**2018 முதல் 2020 வரையான வருடங்களில் பீடி, சிகரட், சுருட்டு உற்பத்திகள் பொருட்டு புகையிலையை இறக்குமதி செய்தல் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்தல் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.**

| விபரம் | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|
| | கி.கி. | கி.கி | கி.கி |
| இறக்குமதி செய்த புகையிலை | | | |
| வரியுடன் | 1,469,620 | 907,950 | 1,270,472 |
| வரி விடுவிக்கப்பட்ட | 2,956,560 | 4,434,840 | 1,108,710 |
| உள்நாட்டில் உற்பத்தி செய்த புகையிலை | 1,744,157 | 2,045,855 | 2,158,721 |
| சிகரட் இறக்குமதி | 17,180 | 5,500 | 111,960 |

(இ) புகையிலை வரிச் சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் பொருட்டு எடுக்க வேண்டிய செயன்முறைகள் சம்பந்தமான தற்போதைய நிலை பற்றிய பரிசோதனையின் போது திருத்தப்பட்ட புகையிலை வரிக் கட்டளையின் 2018 யூலை 05 ஆம் திகதிய சட்ட வரைபுகள் ஒரு ஆதாரத்திற்கு குறிப்பீடு செய்யப்பட்டிருந்தன. புதிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தில் ஏற்பாடுகள் இன்மையால் அதில் திருத்தத்தை மேற்கொள்வதற்கு தற்போது அதிகாரத்திலுள்ள புகையிலை வரிச் சட்டத்தில் திருத்தஞ் செய்யப்பட வேண்டுமென சட்ட வரைஞர் திணைக்களத்தினால் 2019 செப்டெம்பர் 02 ஆம் திகதி அரசாங்க நிதிக் கொள்கைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவித்து அனுப்பப்பட்டிருப்பினும் மீளாய்வு வருடம் வரையில் இங்கு முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை.

மேலும், மதுவரித் திணைக்களத்தினால் சிகரட் நுகர்விற்கு மாத்திரம் ஒழுங்குபடுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. பீடி நுகர்வின் ஊடாக உறிஞ்சப்படுகின்ற புகை உடலிற்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதாகவும், தீவிரமான வியாதிகளுக்கு அது காரணமாக இருப்பதாகவும் இனங்காணப்பட்டதுடன், அது தொழிற் படையின் வினைத்திறனை அதிக அளவில் இழக்கப்படுவதற்கு தாக்கமளிக்கின்றது எனவும் இனங்காணப்பட்டது. அதன் காரணமாக பீடி உற்பத்தியினை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தும் தேவைப்பாடு காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகள்

மதுவரித் திணைக்களத்தின் நிறைவேற்றுகை பொருட்டு குறித்தொதுக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளிற்கு அமைய மீளாய்வு வருடத்திலும் கடந்த மூன்று வருடங்களிலும் மதுவரித் திணைக்களத்தால் கண்டுபிடிக்கப்பட்ட( சுற்றிவளைப்புகள்) குற்றங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

| **நோக்கங்கள்** | **மேற்கொள்ளப்பட்ட குற்றக் கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை** | | | |
|---|---|---|---|---|
| | 2020 | 2019 | 2018 | 2017 |
| மதுவரிக் கட்டளைச் சட்டம் | 31,875 | 33,791 | 36,859 | 40,942 |
| நஞ்சு, அபின் மற்றும் அபாயகர அவுடதங்கள் கட்டளைச் சட்டம் | 4,988 | 8,225 | 6,047 | 6,015 |
| புகையிலை வரிச் சட்டம் | 1,931 | 3,865 | 3,470 | 2,485 |
| புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய தேசிய அதிகாரசபைச் சட்டம் | 829 | 1,483 | 2,902 | 4,406 |
| மொத்த கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை | 39,623 | 47,364 | 49,278 | 53,848 |

மேற்படி தரவுகளின் பிரகாரம், 2017 முதல் மீளாய்வு வருடம் வரை மொத்த கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருதல் அவதானிக்கப்பட்டது. மேலும், முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வு வருடத்தில் நஞ்சு, அபின் மற்றும் அபாயகர அவுடதங்கள் கட்டளைச் சட்டம், புகையிலை வரிச் சட்டம், புகையிலை மற்றும் அற்ககோல் பற்றிய அதிகாரசபைச் சட்டம் என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குற்றக் கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கைகள் முறையே 3227, 1934, 654 அதாவது, 39 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 44 சதவீதம் ஆகக் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) இரு மதுவரி நிலையங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனைகளில், குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதுவரி உரிமம் பெற்ற நிலையப் பரிசீலனை என்பன பற்றி அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

i. 2018 முதல் மீளாய்வு வருடம் வரை பாதுக்கை மதுவரி நிலையத்தின் குற்ற அறிக்கைப் பதிவேட்டுப் பரிசோதனையில் 2020 செப்ரெம்பர் 29 ஆம் திகதிய கணக்காய்வுத் தினம் வரையிலும் நீதிமன்ற நடவடிக்கை எடுக்காமை மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன் சமர்ப்பிக்காத 18 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

ii. மேலும், அம்மதுவரி நிலையத்திற்குரிய பிரதேசத்தில் 38 மதுவரி உரிமம் பெற்ற நிலையங்கள் மாத்திரம் இருந்ததுடன் 2019 ஜனவரி முதல் 2020 செப்ரெம்பர் 29 ஆம் திகதி வரை அவற்றில் 21 நிலையங்களின் பரிசோதனை முன்னேற்றம் பற்றி பரிசீலிக்கையில், 04 நிலையங்களில் எந்தவொரு பரிசீலனையும் இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. ஏனைய 17 நிலையங்களில் பரிசீலனை மட்டம் 1 முதல் 4 இற்கிடையில் இருந்தது.

iii. பருத்தித்துறை மதுவரி நிலையத்தின் குற்ற அறிக்கைப் பதிவேட்டுப் பரிசீலனையின் போது. 2019 இல் மேற்கொள்ளப்பட்ட 25 குற்ற அறிக்கைகள் மற்றும் 2020 இல் மேற்கொள்ளப்பட்ட 135 குற்ற அறிக்கைகள் என்பன சம்பந்தமாக கணக்காய்வுத் தினமான 2020 நவம்பர் 30 ஆம் திகதி வரை தேவையான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

3.2. **செயற் திட்டங்கள்**

2017 யூலை 25 அம் திகதிய 2/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கைக்கு இணங்க வெளியிடப்பட்ட மேலதிக சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற் திட்டங்கள் தயாரிக்கையில் திணைக்களத்தின் தொலைநோக்கு, செயல்நோக்கு மற்றும் உபாயத்திறன்களுடனான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் உரிய செயலாற்றுகைச் சுட்டெண் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

3.3. **பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு வருடத்திற்கு 03 பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. இதில் இறுதிக் காலாண்டின் 07 மூலதன செலவு விடயங்களினதும் 08 மீண்டெழும் செலவு விடயங்களினதும் நடவடிக்கைகள் மீளாய்வு வருட இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும் பெறுகைத் திட்டங்கள் அடங்கலான விடயங்களான, மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் 3 பிரிவுகள், 11 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்கள், 24 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள் மற்றும் 52 மதுவரி நிலையங்களின் பல்வேறு மூலங்களிற்கு அமைய மதுபானங்களின் செறிவை அளவிடும் 814 தொகுதி உபகரணங்கள், 138 அளவிகளது தேவைப்பாடு இனங்காணப்பட்டிருந்ததுடன் மீளாய்வு வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் இவ்வுபகரணங்களைக் கொள்வனவு செய்ய அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை நடவடிக்கைகளில் நிலவிய தாமதம் காரணமாக மீளாய்வு வருட இறுதி வரை கொள்வனவு இடம்பெற்றிருக்கவில்லை.

**3.4. நுட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த வருடம் இல PE-0677 ஆம் இலக்க வாகன விபத்து சம்பந்தமாக ஏற்பட்ட நட்டமான ரூ. 707,155 இல் ரூ. 536,771 மாத்திரம் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் அறவிட இயலாத ரூ. 170,384 இனை உரிய குற்றம் புரிந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது பற்றி நட்டங்கள் மற்றும் கைதவிர்த்தல் தொடர்பான கூற்றில் குறிப்பெதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இல.13 சீதுவை முகலங்கொமுவ எனும் பெயருடைய கள்ளுத் தவறணைக்கு உயர்ந்த கேள்விப் பெறுமதி ரூபா 4,375,000 ஆக இருந்தும் அக் கேள்வியானது இரண்டாம் கேள்விதாரருக்கு ரூபா 3,800,505 இற்கு வழங்குவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயம் என்ன என்பது தொடர்பான எழுத்துமூல சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அதன் மூலம் அரசாங்கத்திற்கு ரூபா 574,495 நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

3.5. **கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்கப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 கணக்காண்டிற்காக 15 கணக்காய்வு ஐயவினாக்கள் வெளியிடப்பட்டதுடன் அக்கணக்காய்வு ஐயவினாக்களில் 06 இற்கு பதில் வழங்க 3-6 மாதங்கள் வழங்கப்பட்டிருந்தது. 06 மாதங்களிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தாலும் 06 ஐயவினாக்களிற்கு இது வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சட்ட விரோதமாக இறக்குமதி செய்த மதுசாரத்தைப் பயன்படுத்திய கம்பனி ஒன்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சுங்கப் பரிசோதனையில் 518,600 லீற்றர் இறக்குமதி செய்தமை தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் விசாரணைப் பிரிவினால் அனுப்பப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு மேலும் எழுத்துமூலமாகத் தெளிவுபடுத்துமாறு கோரி 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதிய SIN/A/PI/201902 ஆம் இலக்க ஐயவினாவின் ஊடாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6. முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண உதவி மதுவரி ஆணையாளர் மற்றும் மதுவரி அத்தியட்சகர்களால் அவர்களின் மகாணத்தின் வியாபாரத்தை முன்னிட்டு வைக்கப்பட்டுள்ள கள்ளுப் போத்தல்களின் மாதிரியை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் பெற்றுக்கொண்டு இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் இரத்தினபுரி இலக்கம் 1 மற்றும் இலக்கம் 2 ஆகிய கள்ளுத் தவறணைகளிலிருந்து 2017 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் 2020 வரை மாதிரிகளைப் பெற்று இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சம உரிமதாரர்களாக செயற்பட்ட இருவரினால் வெ.ம.04 உரிமம் ஒன்றை 2013 முதல் 2017 வரை புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் சத்தியக் கடதாசி மூலம் 2018 இலிருந்து ஒருவருக்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2015 டிசம்பர் 15 ஆம் திகதிய 983 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் உரிமத்தை ஒப்படைக்கும் கட்டணமாகிய ரூபா 15,000,000 பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது, ரூபா 200,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மதுவரி அறிவித்தல் இலக்கம் 926 இன் பிரகாரம் ரூபா 1,300,000 பணம் அறவிடப்பட்டுள்ளது என இதற்காக வழங்கப்பட்ட கணக்காய்விற்காக அனுப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டது. அதற்கிணங்க மேலும் அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 13,500,000 ஆகும்.

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதிலுள்ள முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் மதுவரித் திணைக்களம் 15 குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குரிய 37 இலக்குகளை மீளாய்வு வருடத்தில் இனங்கண்ட போதிலும், அவற்றை திணைக்களத்தின் நோக்கங்களிலும் பணிகளிலும் முறையாக இணக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும், அது பற்றி மீளாய்வு வருடத்தில் முன்னேற்றத்தைப் பரிசீலிக்கையில், 03 குறிக்கோள்களிற்குரிய 03 இலக்குகளில் எந்த முன்னேற்றமும் அறிக்கையிடப்படவில்லை. அத்துடன் மூன்று குறிக்கோள்களிற்குரிய ஒன்பது இலக்குகளின் முன்னேற்றம் 50 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) மதுபானங்களின் தரத்தை உறுதிப்படுத்தல், மதுவரி வருமானங்களின் முகாமைத்துவ முறைமை, பாதுகாப்பு ஸ்டிக்கர் முகாமைத்துவ முறைமை, மதுபான உற்பத்திச்சாலைகளிற்குரிய சுற்றுச் சூழல் சான்றிதழ் மற்றும் பொயிலர் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய இலக்குகளில் செயலாற்றுகை அறிக்கையில் காட்டப்பட்ட முன்னேற்ற மட்டம் திருப்திகரமானதாக இல்லை.

## 5. நல்லாட்சி

### 5.1. உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வு வருடத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கள அலுவலகப் பரிசோதனை, உற்பத்திச்சாலைப் பரிசோதனை, மதுவரிச் செயற்பாட்டுக் கருமபீடத்தின் செயற்றிறன், தொழில்நுட்பக் குற்ற அறிக்கைகளின் வெகுமதி நிதிக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல், நிலுவை வரி வருமானத்தை அறவிடுதல், மதுபான உற்பத்திச்சாலைகளின் வரி அறவிடுதல், திணைக்களக் காணிகள், கட்டடங்களின் சட்டரீதியான உடைமையை உறுதிப்படுத்தல் மற்றும் நிதிக் கணக்காய்வு சம்பந்தமான செயலாற்றுகையில் குறைபாடு, அறிக்கைப் பதிவேடுகளைப் பேணுவதில் குறைபாடு, வெளிக்கள அலுவலகங்களின் செயற்றிறனில் குறைபாடு ஆகியவாறு 8 ஐயவினாக்களின் ஊடாக சகல அவதானிப்புகளும் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் குறைபாட்டை சரிசெய்து கொள்ளல் மற்றும் இயக்கச் செயலாற்றுகையில் குறைபாட்டை சரி செய்து கொள்ளல் தொடர்பில் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 6. மனித வள முகாமைத்துவம்


பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இணைக்கப்பட்டுள்ள பதவியணியினர் மற்றும் உண்மையான பதவியணியினர்**

6.1 மீளாய்வு வருடத்தின் இறுதித் தினத்தன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உண்மையான பதவியணியினரை ஒப்பிடுகையில் 316 பதவி வெற்றிடங்கள் நிலவியது. அதன் விபரங்கள் பின்வருமாறு.

| பணியாளர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 67 | 39 | 28 |
| மூன்றாம் நிலை | 381 | 312 | 69 |
| இரண்டாம்நிலை | 1002 | 839 | 163 |
| ஆரம்பநிலை | 142 | 86 | 56 |
| **மொத்தம்** | **1592** | **1276** | **316** |

2019 டிசம்பர் 31 ஆம திகதியன்று பல்வேறு காரணங்களால் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 48 அலுவலர்களில் 20 அலுவலர்கள் சம்பந்தமாக ஒரு வருடத்திலிருந்து 3 வருடத்திற்கு மேலாகிய போதிலும் உரிய ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.



(ஆர்.ஆர்.எம்.அபேசிங்ஹபண்டா)
பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பொருட்டு

# அத்தியாயம் - 04

## செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 அறிமுகம்
4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்
4.2.1 நிர்வாகப் பிரிவு
4.2.2 வருமானப் பிரிவு
4.2.3 சட்ட வலுப்படுத்தற் பிரிவு
4.2.4 கணக்கீட்டுப் பிரிவு
4.2.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
4.2.6 மனித வளப் பிரிவு
4.2.7 தகவல் தொழில்நுட்பப் பிரிவு
4.2.8 போக்குவரத்து, ஆதரவளிப்புப் பிரிவு
4.2.9 ஆராய்ச்சி மற்றும் கற்கைகள் பிரிவு
4.2.10 வழங்கல் ஒழுங்கமைப்புப் பிரிவு
4.2.11 சட்டப் பிரிவு
4.2.12 புள்ளிவிபரப் பிரிவு

## 4.1 அறிமுகம்

2020 இன் செயற்திட்டம் நிதி அமைச்சின் PFD/RED/COPA/2019 /01 ஆம் இலக்க, 2020.01.30 ஆம் திகதிய அறிவுறுத்தலின் படி இலங்கை மதுவரித் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டது. இங்கு சகல பிரிவுத் தலைவர்களையும் ஒருங்கிணைத்து அப்போதிருந்த தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள் மற்றும் எதிர்கால இலக்குகளின் அடிப்படையில் இச்செயற் திட்டம் தயாரிக்கப்பட்டது.

எனினும் 2020 இல் பாராளுமன்ற பொதுக் கணக்குகள் பற்றிய குழுவினால் தரப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்களை திருத்தஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2020 இன் செயற் திட்டத்தின் அடிப்படையில் உரிய செயற்பாட்டுப் பிரிவுகளிற்கான எதிர்பார்க்கப்பட்ட பூர்த்திச் சதவீதமாகப் பார்க்கையில், முறையே நிர்வாகப் பிரிவு, வருமானப் பிரிவு, சட்ட வலுப்படுத்தல் பிரிவு, சட்டப் பிரிவு, கணக்குகள் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு என்பவற்றின் இணையத் தளங்களை இற்றைப்படுத்தல் மற்றும் வழங்கல் தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவின் ஸ்ரிக்கர் வேலைத்திட்டத்தின் வெளிநாட்டு மதுபானங்களிற்கான நடவடிக்கைகளில் எதிர்பார்த்த வெளியீட்டு சதவீதத்தை 90% முதல் 100% வரை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், போக்குவரத்து மற்றும் ஆதரவளிப்புப் பிரிவின் பிரேரிக்கப்பட்ட நிர்மாண நடவடிக்கைகள், கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கற்கை நடவடிக்கைகள், 2020 இன் செயற் திட்டத்திற்கு ஏற்ப எதிர்பார்த்த வெளியீட்டுச் சதவீதம் 75% முதல் 89% வரை காணப்பட்டது. மேலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் ஆராய்ச்சி நடவடிக்கைகள், மனிதவளப் பிரிவின் மொத்த அலுவலர் பயிற்சி, அலுவலர் விருத்தி என்பன சதவீதமாக 50% - 74% எனும் எல்லையில் உள்ளது.

**2020 இன் எதிர்பார்த்த நிறைவேற்றுகையை 90% - 100% வரையான மட்டத்தில் பேண முடியாமைக்கான பிரதான காரணம் 2020 மார்ச் 18 ஆம் திகதி முதல் வருட இறுதி வரை நாடு முழுவதும் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக அரசாங்க சுகாதாரத் துறை மற்றும் அரச கொள்கை ரீதியான தனிமைப்படுத்தல் விதிகளிற்கு அமைய பொது மக்கள் ஒன்றுகூடலைத் தவிர்த்தல், அரச பணியாளர்களை சேவைக்கு வரவழைத்தலில் குறைந்த சத வீதத்தினரை அழைத்தல், போக்குவரத்து நடவடிக்கைகளில் நிலவிய குறைபாடு, கட்டட நிர்மாணம் மற்றும் ஏனைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களிற்கு அதிகாரிகளையும் பணியாளர்களையும் ஈடுபடுத்துவதில் தடங்கல் ஏற்பட்டமை காரணமாக, நிறைவேற்றுகையின் வெளியீட்டு சதவீதம் எதிர்பார்த்த மட்டத்திலும் குறைவடைந்தமை எமது நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்வு எனக் காணலாம். குறிப்பாக இக்கொவிட் தொற்றுநோய் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஒட்டு மொத்த அலுவலர்களின் பயிற்சி மற்றும் வளர்ச்சியில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும் மேலே காட்டப்படவாறு, இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 04 செயற்பிரிவுகள் தமது நிறைவேற்றுகையை 90% - 100% சதவீதத்தில் பேணியிருத்தல் சிறப்பான அடைவாகக் காணலாம். இதன்படி கொவிட் 19 தொற்றுநோய் நிலவிய போதிலும் ரூபா 121.03 பில்லியனை அறவிடுதற்கு வருமானப் பிரிவினால் முடிந்தமை விசேடமான அடைவாகும்.**

## 4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (2020 செயற் திட்ட அடிப்படையில்)

| திணைக்களத்தின் பிரிவுகள் | விசேட சுட்டிகள் | | எதிர்பார்த்த வெளியீட்டு சதவீதமாக ( % ) உண்மை வெளியீடு | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | >100% | 90 %- 100% | 75% - 89 % | 50 % - 74 % | 0% - 50% |
| 4.2.1 நிர்வாகப் பிரிவு | நிர்வாகம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் | | | 100% | | | |
| 4.2.2 வருமானப் பிரிவு | 2020 இன் எதிர்பார்த்த வருமானத்தை சேகரித்தல் | மதுபானம் | | 95% | | | |
| | | புகையிலை | 104% | | | | |
| 4.2.3 சட்ட வலுப்படுத்தல் பிரிவு | 1. உரிய கட்டளைச் சட்டங்களை செயற்படுத்தல் | | 118% | | | | |
| | 2. மதுவரி உரிமங்களிற்கான தொழில்நுட்ப குற்ற அறிக்கைகள் | | 121% | | | | |
| | 3. போதைப்பொருட் குற்ற அறிக்கைகள் | | | | 75% | | |
| | 4. புகையிலை தொடர்பான சுற்றிவளைப்பு இலக்குகள் | | | | 75% | | |
| 4.2.4 கணக்கீட்டு பிரிவு | 2020 வருடத்தின் சகல கணக்கீட்டு நடவடிக்கைகள் | | | 99% | | | |
| 4.2.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 2020 வருடத்தில் மேற்கொள்ள வேண்டிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | | | | 67% | |
| 4.2.6 மனித வளப் பிரிவு | 1. சகல அலுவலர்களிற்கும் பயிற்சி | | | | | | 43% |
| | 2. அலுவலர் மேம்பாடு | | | | | 65% | |
| 4.2.7 தகவல் தொழில்நுட்பப் பிரிவு | இணையத்தளத்தை இற்றைப்படுத்தல் | | | 99% | | | |
| | புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் | | | | | | 5% |
| 4.2.8 போக்குவரத்து, ஆதரவளிப்பு பிரிவு | பிரேரிக்கப்பட்ட கட்டடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் | | | | 85% | | |
| | போக்குவரத்து, ஏனைய பணிகள் | | | | 80% | | |
| 4.2.9 கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | கற்கை நடவடிக்கைகள் | | | | 75% | | |
| | இணையத்தளத்தை இற்றைப்படுத்தல் | | | - | - | - | - |
| 4.2.10 வழங்கல்தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு | ஸ்ரிக்கர் வேலைத்திட்டம் | உள்நாடு | | | - | - | |
| | | வெளிநாடு | | 100% | | | |
| 4.2.11 சட்டப் பிரிவு | சட்ட தேவைப்பாடுகள் | | 105% | | | | |
| | எதிர்பார்த்த புதிய தேர்ச்சிகள் | | | 100% | | | |

*2020.03.18 முதல் 2020.12.31 வரையான வருடம் முழுவதிலும் நாடு முழுவதும் நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் எதிர்பார்த்த நிறைவேற்றுகை வெளியீட்டு சதவீதமான 100% ஐ பூர்த்தி செய்ய இயலாதிருந்தது.

# அத்தியாயம் - 05

## பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அறிமுகம்
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள்
5.3 முன்னேற்றம்

## 5.1 அறிமுகம்

இலங்கையின் சகல அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றில் உள்ள அரச நிர்வாக நிறுவனங்கள் தமது வருடாந்த செயற் திட்டத்தை இனங்காணுகையில் தமது நிறுவனத்திற்கு ஏற்ப இனங்காணப்பட்ட 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை தமது நிறுவனத்தினுள் நடத்துவது பற்றி இனங்காணுதல் வேண்டும். அதன் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களம் எதிர்கால நடவடிக்கையை மேற்கொண்ட விதம் அட்டவணை 5.2 இல் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

2019 இற்கான மதுவரித் திணைக்களத்தின் செயற்திட்டத்தைத் தயாரிக்கையில் இந்நிலையான அபிவிருத்தி இலக்குகள் பற்றிக் கவனத்திற் கொள்ளப்படவில்லை. 2020 இன் செயற் திட்டத்தைத் தயாரிக்கையில் 2017 இன் 19 ஆம் இலக்க பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 17 இற்கு ஏற்ப மதுவரித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் முறையை தெளிவாகக் காட்டுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 17 பிரதான நிலையான அபிவிருத்தி இலக்குகளை இலங்கை மதுவரித் திணைக்களம் கைக்கொள்ளும் பொருட்டு ஆரம்பக் கற்கை மேற்கொள்ளப்பட்டு 17 இலக்குகளிற்கேற்ப இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற் திட்டத்தை வரிசைப்படுத்துவதற்கு உரிய பிரிவுகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

17 நிலையான அபிவிருத்தி இலக்குகளைக் கவனத்திற் கொள்கையில் இலக்கு 01, 12 மற்றும் 16 ஆகிய பகுதிகள் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் வேலைத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களிற்கு நேரடியாகப் பங்களிப்பு வழங்கும் முறையை ஏனைய 15 இலக்குகளில் தெளிவாக ஒவ்வொரு இலக்குகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2020 இல் நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக பேண்தகு இலக்குகளை அடைவதில் பல்வேறு சிக்கல்களைச் சந்திக்க நேரிட்டமையால் அடைவுகளைப் பெறுவதில் மெதுவான முன்னேற்றம் காணப்படினும் ஓரளவிற்கு முகாமை செய்ய இயலுமாகவிருந்தது. இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் 2021 இல் எதிர்பார்க்கப்படும் நிறைவேற்றுகையை பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து எதிர்வரும் வருடத்திற்கு சரியாக மதுவரித் திணைக்களத்தின் தொலை நோக்கு, செயல் நோக்கு, குறிக்கோள் என்பவற்றிற்கு அமைய எதிர்பார்த்த அபிவிருத்தியை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை(SDG) அடையும் செயலாற்றுகை

### 5.2 இனங்காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு 2020 இன் செயற் திட்டத்திற்கு அவ்விலக்குகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.
- 2020 இற்கான பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் வருமாறு.

| இலக்கு/ குறிக்கோள் | அடைவுகள் | குறிகாட்டிகள் | இது வரை எய்தப்பெறுகையின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% -49% | 50% -70% | 75%-100% |
| **இலக்கு - 01**<br>சகல இடத்திலும் சகல முறையிலும் வறுமையை ஒழித்தல் | ➢ சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் அபாயகரமான அவுடதங்களை வினைத்திறன் மிக்க முறையில் சட்ட வலுப்படுத்தலின் ஊடாக சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தல். | | | | ✓ |
| | ➢ ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராமங்களைத் தெரிவு செய்து மதுபானங்கள் மற்றும் அபாயகர அவுடதங்களை வினைத்திறன் மிக்க முறையில் நிர்வகித்தல் பற்றி தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை நாடு முழுதும் நடாத்துதல் | | ✓ | | |
| | ➢ உற்பத்திகளைக் கொள்வனவு செய்தலில் ஆர்வமின்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு மதுபானம், புகையிலைக்கான வருடாந்த வரியை அதிகரித்தல் அல்லது விலையை அதிகரித்தல். | | - | - | - |
| | ➢ சட்ட விரோத மதுபான, போதைப்பொருட் பாவனையை கட்டுப்படுத்தும் முறையை செயற்படுத்துதல் | | | | ✓ |
| | ➢ பிற வளப் பங்குதாரர்களின் உதவியுடன் தவிர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | | | ✓ | |
| **இலக்கு** - 02<br>பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு, உயர் போஷணை மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல் | பொருத்தமற்றது | | - | - | - |
| **இலக்கு** - 03<br>எல்லோருக்கும் ஆரோக்கியமான வாழ்வைப் பேணுதல், சகல வயதினருக்கும் நல்வாழ்வை மேம்படுத்தல் | ➢ மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டபூர்வ பானங்களின் தரத்தை உறுதிப்படுத்துதல் | | | | ✓ |
| | ➢ சுகாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு சட்ட விரோத மதுபான விற்பனையைக் குறைத்தல் | | | | ✓ |
| | ➢ பயனுள்ள தடுப்புத் திட்டங்கள் ஊடாக சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தல் | | ✓ | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ➢ நாட்டு மக்களின் நல்வாழ்வு பொருட்டு சட்ட விரோத மதுபானங்கள், போதைப்பொருட்கள் தொடர்பில் சட்டவலுப்படுத்துதல் | | | | ✓ |
| **இலக்கு** - 04<br>அனைவருக்கும் இடைநிலை மற்றும் சமத்துவக் கல்வியை வழங்கல் மற்றும் வாழ்நாள் முழுதும் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தல் | ➢ உயிருக்கு ஆபத்தான மதுபானங்களை தவிர்ப்பதற்கான தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை சகல மட்டத்திலுள்ள பிரஜைகளுக்கும் நடத்துதல்.<br>➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சகல தர அலுவலர்களிற்கும் மனித வள அபிவிருத்தி பற்றிய பயிற்சி. | | ✓ | ✓ | |
| **இலக்கு - 05**<br>ஆண் பெண் சமத்துவத்தை பேணலும் சகல பெண்கள், பெண் பிள்ளைகளை வலுவூட்டலும் | ➢ மதுவரிக் காவலாளர் இலிருந்து பரிசோதகர் வரையான மதுவரிப் பதவிகளிற்கு ஆட்சேர்த்தல் பொருட்டு ஆண், பெண் இரு பாலினருக்கும் விண்ணப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.<br>➢ பெண் அலுவலர்களிற்கு பதவியுயர்வின் பொருட்டு சம சந்தர்ப்பம் வழங்குதல். மதுவரி அலுவலர் முதல் உயர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தலில் ஆண், பெண் இரு பாலாருக்கும் விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கல்<br>➢ ஆண் பெண் அலுவலர்களிற்கு பயிற்சி, அபிவிருத்தி பொருட்டு சம சந்தர்ப்பம் வழங்கல்<br>➢ ஆண், பெண் இருபாலாருக்கும் நியாயமான சம்பளத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதால் ஆண், பெண் பேதம் கருத்திற் கொள்ளப்படவில்லை. | | | | ✓<br>✓<br>✓<br>✓ |
| **இலக்கு** - 06<br>சகலரும் நீர், சுகாதார வசதிகளைப் பெறுதலை உறுதி செய்தல், நீர், சுகாதாரத்தின் நிலையான முகாமைத்துவம் | ➢ மதுபான உற்பத்திகளிற்குரிய கைத்தொழில்களில் சுற்றாடல் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.<br>➢ இயற்கை நீர் மூலங்களை அழிக்கும் சட்ட விரோத மதுபான உற்பத்திகளை இழிவுபடுத்தி நீர் நிலைகளைப் பாதுகாத்தல் | | ✓ | | ✓ |
| **இலக்கு** - 07<br>சகலருக்கும் இயனறளவு, நம்பகரமான, நிலையான, நவீன சக்தியைப் பெறுவதை உறுதி செய்தல் | ➢ மதுபான உற்பத்திக்கான சகல உற்பத்திச்சாலைகள், வடிசாலைகளை செயற்படுத்துகையில் குறைவான மின் சக்தியை பயன்படுத்தி சக்தியைச் சேமிப்பதற்கு உற்பத்திச்சாலைகள் நடவடிக்கை எடுத்தற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | | - | - | - |
| **இலக்கு** - 08<br>நிலையான, உலகளாவிய, பொருளாதார விருத்தி, | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் நிறுவனத்தின் சகல தரப் பணியாளர்களிற்கும் பண்பான பணிகள் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சகலருக்கும் முழுமையான, உற்பத்தித்திறன் மிக்க வேலைவாய்ப்பு, சிவில் வேலைகளை மேம்படுத்தல். | வழங்கப்பட்டுள்ளன. நிதி அமைச்சு மற்றும் மதுவரித் திணைக்களத்தினால் நியாயமான வருமானமும் அவர்களின் தொழில், வாழ்க்கைக்கான பாதுகாப்பு, சமுகப் பாதுகாப்பு, தனிநபர் விருத்தி என்பவற்றிற்கான சிறப்பான வாய்ப்புகளையும் வழங்குவதுடன் அலுவலர்களினதும் மக்களினதும் அடிப்படை உரிமைகளும் உறுதிப்படுத்தப்படுகிறது. திணைக்களத்தின் சகல தரப் பணியாளர்களிற்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. | | | | ✓ |
| | ➢ வினைத்திறன் மிக்க ஒழுங்கமைக்கப்பட்ட சுற்றுச்சூழலை உருவாக்கல் | | | | ✓ |
| | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஊடாக பெறப்படும் வருமானம் நாட்டின் பேண்தகு அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படுகிறது. | | | | ✓ |
| **இலக்கு** - 09<br>மீள்திறனுள்ள உட்கட்டமைப்பை நிறுவுதல், உலகளாவிய, நிலையான தொழில்நுட்பக் கட்டமைப்பை விருத்தி செய்தல் மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் வினைத்திறன் மிக்க வரி நிர்வாகப் பொறிமுறை மற்றும் வரி வருமானத்தைப் பாதுகாத்தல். | | | | ✓ |
| | ➢ மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உதவியுடன் மதுவரி வருமான முகாமை முறையை (Revenue Administrative System for Excise Department -**RASED**) தாபிக்கும் நடவடிக்கையை வழங்குதல் | | ✓ | | |
| | ➢ வரி நிர்வாகத்தினை வினைத்திறன் மிக்கதாக்குதல் | | | | ✓ |
| | ➢ வரி நிர்வாகம் இலகுபடுத்தல் மற்றும் மாற்றுச் சந்தைக்கு வருதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பின் பொருட்டு மதுபானங்களிற்கான ∴பூல் புரூப்∴ ஸ்ரிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டது. | | ✓ | | |
| | ➢ புதிய மதுவரி ஒழுங்குவிதிகளை இற்றைப்படுத்தல் தேவைக்கேற்ப காலத்திற்குக் காலம் சமர்ப்பித்தல். | | | ✓ | ✓ |
| | ➢ புதிய உற்பத்திகளை சரிபார்த்தலின் ஊடாக மதுபான மற்றும் புகையிலைக் கைத்தொழிலில் ஏற்படும் குறைபாட்டைக் குறைத்தல். | | | | |
| **இலக்கு** - 10<br>நாடுகளிற்குள்ளும் இடையிலும் நிலவும் சமத்துவமின்மையை இழிவுபடுத்தல். | ➢ வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வெளிப்பாட்டை மேம்படுத்தல் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களப் பணியாளர்களிற்கு வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் | | - | - | - |
| | ➢ மதுபான, புகையிலை வருமான நிர்வாகம் மற்றும் அபாயகரமான | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவுடதங்கள் கட்டுப்பாடு, புகையிலை கட்டுப்பாடு சம்பந்தமான சர்வதேச அமைப்புடன் வினைத்திறன் மிக்க வலையமைப்பை பேணுதல்<br>➢ உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஊடாக சர்வதேச தரப்படுத்தல் அமைப்பு மற்றும் தேசிய தரப்படுத்தல் நியமங்களைப் பெற நடவடிக்கை எடுத்தல். | | ✓<br>✓ | | |
| **இலக்கு** - 11<br>நகரங்கள், மானிட குடியேற்றங்களின் ஒருங்கிணைந்த, பாதுகாப்பான, நிலையான கட்டடங்கள் | மனித குடியேற்றங்களின் பாதுகாப்பின் பொருட்டு சட்ட விரோதமான போதைப்பொருட்கள், மதுபானங்களற்ற சமுதாயத்தை கட்டியெழுப்புதற்காக திணைக்கள வேலைத்திட்டம் செயற்படுகிறது. | | | ✓ | |
| **இலக்கு** - 12<br>நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளைப் பாதுகாத்தல். | ➢ இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பாக மதுபான நுகர்வு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மதுபானம் மற்றும் புகையிலை நுகர்வை குறைப்பதற்கு அல்லது இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>➢ நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல். அவ்வாறே உயர்தர மதுபான மற்றும் புகையிலை சான்றுப்படுத்தல்களின் பொருட்டு மதுபானங்களிற்கான உற்பத்திச்சாலையை வினைத்திறன் மிக்க முறையில் மேற்பார்வை செய்தல். | | ✓ | | ✓ |
| **இலக்கு** - 13<br>காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கத்திற்கு எதிராக உடன் நடவடிக்கை எடுத்தல் | ➢ மதுவரித் திணைக்களத்தின் மதுபான உற்பத்திச்சாலைகளிற்கு புதிய உரிமம் வழங்குகையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் வழங்கப்படும் சுற்றாடல் சான்றிதழ் பெறுவதற்கு அறிவுறுத்தலின் ஊடாக சூழல் மாசுபடலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பூகோள காலநிலை மற்றும் சூழலுக்கு இசைவான உற்பத்திச் சான்றிதழ் பொருட்டு உலகளாவிய காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் இசைவுச் சான்றுப் படுத்தலுக்காக உரிய நிறுவனத்தால் கொதிகலன் சான்றிதழும் பெறப்படல் வேண்டும். | | | | ✓ |
| **இலக்கு** - 14<br>நிலையான அபிவிருத்தி பொருட்டு சமுத்திரம், கடல், கடல் வளங்களைப் பாதுகாத்தலும் நிலையானதாகப் பாவித்தலும் | | - | - | - | - |
| **இலக்கு** -15<br>புவியியல் சுற்றுச்சூழலை பாதுகாத்தல், பிரதியீடு, நிலையான பயன்பாடு மற்றும் வனங்களின் நிலையான முகாமை, | ➢ மதுவரித் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் சகல வடிசாலைகள், உற்பத்திச்சாலைகளை ஸ்தாபிக்கையில் அவற்றின் சுற்றுச்சூழலுக்கு இழப்பு ஏற்படாதவாறு தாபித்தல் | | | ✓ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாலைவனமாக்கலை எதிர்த்து நிற்றலும் நில விரயம், பல்லுயிர் இழப்பு என்பவற்றைத் தடுத்தலும். | மற்றும் அவற்றின் சூழலைப் பாதுகாக்கவும் பல்லுயிர் பாதிப்பு ஏற்படாதவாறு மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>➢ சட்ட விரோத கஞ்சா செய்கையை அழிப்பதன் மூலம் காடழிப்பைப் பாதுகாத்தல் | | | ✓ | |
| **இலக்கு** - 16<br>நிலையான அபிவிருத்தி பொருட்டு அமைதியான, அனைத்தையும் உள்ளடக்கிய சமுகங்களை மேம்படுத்தல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுறுதி மிக்க, பொறுப்பு வாய்ந்த, அனைத்தையும் உள்ளடக்கிய நிறுவனங்களை கட்டியெழுப்புதல் | ➢ அபாயகரமான அவுடதங்கள், சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தொடர்பில் பயன்மிக்க சட்ட அமுலாக்கலின் ஊடாக மக்களுக்கு அமைதியான சுற்றுச்சூழலைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல். | | | | ✓ |
| **இலக்கு** - 17<br>நிலையான அபிவிருத்தி பொருட்டு உலகளாவிய கூட்டாட்சியை செயற்படுத்தலும் மீளுருவாக்க முறைகளை வலுப்படுத்தலும் | ➢ புகையிலை மற்றும் அற்ககோல் சம்பந்தமான அதிகாரசபை, சர்வதேச அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு சபை( INCB), ஐக்கிய நாடுகள் போதைப்பொருள் மற்றும் குற்றம் பற்றிய அலுவலகம்( UNODC) மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாக நடத்தப்படும் வேலைத்திட்டத்திற்கு பயனுறுதி மிக்க முறையில் பங்களிப்பு வழங்கல் மற்றும் அதிகாரசபையால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் புகையிலைக் கட்டுப்பாடு பற்றிய நிலையியற் சம்மேளனத்தின் ஊடாக நடத்தப்படும் வேலைத்திட்டத்திற்கு பயனுறுதி மிக்க முறையில் பங்களிப்பு வழங்கல் | | | | ✓ |

# அத்தியாயம் - 06

## மனிதவள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

6.2 நிறுவனத்தின் நிறைவேற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை

6.3 மனித வள அபிவிருத்தி

* நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை

## அத்தியாயம் 06 - மனிதவள விபரம்

### 06.1 பதவியணி முகாமைத்துவம்

| | 2020.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடம் |
| சிரேஸ்ட | 67 | 39 | 28 |
| மூன்றாம் நிலை | 381 | 312 | 69 |
| இரண்டாம்நிலை | 1002 | 839 | 163 |
| ஆரம்பநிலை | 142 | 86 | 56 |
| **மொத்தம்** | **1,592** | **1,276** | **316** |

### 06.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை.

சிரேஸ்ட தர பதவி வெற்றிடங்களில் பதினான்கு (14) மதுவரி அத்தியட்சகர் பதவி வெற்றிடங்கள் நிலவுவதுடன், திறன் அடிப்படையில் ஒன்பது (9) நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மூன்று(3) பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகளிற்கும் மூன்று(3) உதவி மதுவரி ஆணையாளர்களின் பதவிகளிற்கும் வெற்றிடங்களை நிரப்ப தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மூன்றாம் நிலை பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 69 ஆகும். மதுவரி பரிசோதகர் பதவிகளில் 50 வெற்றிடங்கள் நிலவுவதுடன் திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிற்கு நேர்முகப் பரீட்சை நடத்தி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை வருங்காலத்தில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதம மதுவரி பரிசோதகர் பதவியில் நிலவிய 18 வெற்றிடங்களை நிரப்புவதற்கு பதவியுயர்வு வழங்கல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலைப் பதவிகளில் 13 மதுவரி சார்ஜன், 89 மதுவரி காவலாளர் மற்றும் 19 மதுவரி காவலாளர் சாரதி ஆகிய வெற்றிடங்கள் நிலவுவதுடன் அப்பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் பிரகாரம், வருங்காலத்தில் இப்பதவியுயர்வுகள் மற்றும் நியமனங்களை வழங்கிய பின்னர் திணைக்களத்தில் நிலவும் பாரியளவு வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் இயலுமையைப் பெற்றுக்கொள்ளும்.

**2020 இன் வெற்றிடம் பற்றிய தகவல்கள்**

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | 2020.12.31 ஆம் திகதியன்று நிலைமை | வெற்றிடம் நிலவிய காலம |
|---|---|---|---|
| மதுவரி ஆணையாளர் நாயகம் | 0 | திரு.ஏ.போதரகம 2020.01.14 ஆம் திகதி மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியில் பதிற் கடமை பொருட்டு பணிகளைப் பொறுப்பேற்றதுடன் 2020.08.20 ஆம் திகதி முதல் மதுவரி ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டார். 2020.11.24 ஆம் திகதி அப்பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். திரு. ஏ. போதரகம 2020.12.13 ஆம் திகதி ஓய்வுபெற்றார்.<br>திரு.எம்.ஜே. குணசிறி 2020.12.16 ஆம் திகதி மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்றார். | 07 மாதங்கள் |
| மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் (வருமான நடவடிக்கை மற்றும் சட்ட வலுப்படுத்தல்) | 1 | இப்பதவிக்கு நியமிப்பதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் நியமிப்பதற்கு தகைமை வாய்ந்த ஒருவர் இல்லாமை காரணமாக வெற்றிடம் நிலவியதுடன் 2020.08.20 ஆம் திகதி முதல் திரு.ஏ.போதரகம அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். பின்னர் திரு.ஏ.போதரகம அவர்கள் 2020.08.20 ஆம் திகதி முதல் மதுவரி ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டதுடன் 2020.11.24 ஆம் திகதி அப்பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். எனவே இப்பதவியில் வெற்றிடம் நிலவியது. 2020.12.11 ஆம் திகதி முதல் திரு. எம்.டி.எம்.டபி.கே. திசாநாயக்க இப்பதவியில் கடமை மேவுகை பொருட்டு நியமிக்கப்பட்டார். | 12 மாதங்கள் |
| மதுவரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி) | 1 | இப்பதவியை வகித்த திரு. எம்.டி.எம்.டபி.கே. திசானாயக்க 2019.02.08 ஆம் திகதி முதல் மதுவரி ஆணையாளர் (சட்ட வலுப்படுத்தல்) பதவிக்கு நியமிக்கப்பட்ட காரணத்தால் வெற்றிடம் நிலவியது. | 12 மாதங்கள் |
| மதுவரி ஆணையாளர் (சட்ட வலுப்படுத்தல்) | 1 | இப்பதவியை வகித்த திரு. எம்.டி.எம்.டபி.கே. திசானாயக்க 2020.10.06 ஆம் திகதி முதல் மதுவரி ஆணையாளர் (வருமான, உரிமம்) பதவிக்கு நியமிக்கப்பட்ட காரணத்தால் வெற்றிடம் நிலவியது. | 02 மாதங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (நிர்வாகம்) | 1 | திரு. எஸ்.ரி.ஜயவர்தன இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் 2020.09.28 ஆம் திகதி முதல் வெற்றிடம் நிலவியது. | 03 மாதங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (ஆதரவளிப்பு) | 1 | திரு. எஸ்.ரி.ஜயவர்தன 2020.09.28 ஆம் திகதி வரையும், திரு. டபி.என்.பி.ஆர். பெர்னாண்டோ 2020.10.06 ஆம் திகதி முதலும் கடமை மேவுகையை மேற்கொண்டனர். | 12 மாதங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (மனித வளங்கள்) | 1 | 2018 இல் இருந்த பதவி வெற்றிடம் நிலவியதுடன், திரு.பி.எச்.சி.சில்வா அதற்கான கடமை மேவுகையை மேற்கொண்டார். | 12 மாதங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு) | 1 | 2018 இல் இருந்த பதவி வெற்றிடம் நிலவியது. | 12 மாதங்கள் |

| | | | |
|---|---|---|---|
| பிரதி மதுவரி ஆணையாளர் (வழங்கல் தொடர் ஒழுங்கமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்) | 1 | இப்பதவியை வகித்த திரு. ஆர்.எம்.ரத்னாயக்க 2020.09.15 முதல் பிரதி மதுவரி ஆணையாளர் (வருமானம்) பதவிக்கு நியமிக்கப்பட்டமையால் அத்திகதி முதல் வெற்றிடம் நிலவியது. திரு. ஆர்.எம்.ரத்னாயக்க கடமை மேவுகையை மேற்கொண்டு வருகிறார். | 03 மாதங்கள் |
| உதவி மதுவரி ஆணையாளர் | 4 | அலுவலர்கள் ஓய்வுபெற்றுச் சென்றமையால் வெற்றிடம் நிலவியது.<br>1. திரு.கே.எம்.ஜி. பண்டார - 2020.03.23 | 09 மாதங்கள் |
| | | 2. திரு.கிறிஸ்ரி ஜோசப் - 2020.05.14 | 07 மாதங்கள் |
| | | 3. திரு.ஆர்.எம்.பி.பீ.தர்மகீர்த்தி - 2020.10.06 | 02 மாதங்கள் |
| | | 2019 முதல் அப்பதவியில் வெற்றிடம் நிலவியது. | 12 மாதங்கள் |
| மதுவரி அத்தியட்சகர் | 14 | அலுவலர்கள் ஓய்வுபெற்றுச் சென்றமையால் வெற்றிடம் நிலவியது.<br>1. திரு.எல்.ஜே.ரணவீர - 2020.01.08 | 11 மாதங்கள் |
| | | 2. திரு.டபி.எம்.ஜே.வீரசிங்ஹ - 2020.10.22 | 02 மாதங்கள் |
| | | 2020.12.03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2020.06.23 முதல் செயற்படும் வகையில் 11 பதவிகளிற்கு பதவியுயர்வு வழங்கிய பின்னர் 12 வெற்றிடங்கள் நிலவியது. | 12 மாதங்கள் |
| புள்ளிவிபரவியலாளர் | 0 | 2020.06.15 ஆம் திகதி திருமதி. ஓ.ஆர்.விஜேகுணசிங்ஹ இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 06 மாதங்கள் |
| சட்ட அலுவலர் | 1 | 2019 இல் இருந்த பதவி வெற்றிடம் நிலவியது. | 12 மாதங்கள் |

## 6.3 மனித வளங்கள் அபிவிருத்தி

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மனித வளங்கள் பிரிவு, 2020 இற்கான முழுத் திணைக்களத்தினதும் சீருடை அலுவலர்கள் மற்றும் இணைந்த சேவை அலுவலர்களின் அறிவுத் தேர்ச்சி மற்றும் திறன் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் சகல அலுவலர்களினதும் கொள்ளளவு விருத்தியை உயர்த்துவதற்கும் உள்நாட்டில் 26 பயிற்சி நெறிகள் வருடம் முழுதும் நடத்தப்பட்டன. இங்கு இலங்கை மதுவரி திணைக்களத்தின் பயிற்சிக் கல்லூரியில் 06 பயிற்சி நெறிகளும் அரச அங்கீகாரம் பெற்ற வெளியகப் பயிற்சி நிறுவனங்களில் 18 பயிற்சி நெறிகளும் திணைக்களக் கேட்போர் கூடத்தில் 02 பயிற்சி நெறிகளும் நடத்தப்பட்டன. 2020 வருடம் முழுவதும் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக வெளிநாட்டு பயிற்சி நெறி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் சுகாதாரக் காரணங்களினால் உள்நாட்டு பயிற்சி நெறி நடத்துதலும் வெகுவாக மட்டுப்படுத்த நேரிட்டது.

விசேடமாக அரசிற்கு வரி வருமானத்தை வழங்கும் நாடு முழுவதுமுள்ள உற்பத்திச்சாலை நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் அறிவை விருத்தி செய்யும் நோக்கில் கற்கை நெறி ஒன்று 03 குழுக்களின் கீழ் திணைக்கள பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றதுடன் அலுவலர்களின் கணக்கீடு பற்றிய அறிவை விருத்தி செய்யும் நோக்கில் சிறு பணங்களை கட்டுநிதிக் கணக்கில் இடுதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பிராந்திய அலுவலகங்களிலுள்ள 220 தலைவர்கள் மற்றும் கணக்கீட்டு உதவியாளர்களிற்கு இரு குழுக்களாக நடத்தப்பட்டன. மதுவரிக் குற்றங்கள் பற்றிய சட்ட நடவடிக்கைகளில் பங்களிப்பு செய்யும் 65 பிரதான மதுவரி பரிசோதகர்கள் மற்றும் மதுவரி பரிசோதகர்கள் பொருட்டு குற்றவியல் சட்ட வலுப்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் நடைமுறையிலுள்ள மதுவரி அறிவித்தல்களை இற்றைப்படுத்தும் பொருட்டு 45 மதுவரி பரிசோதகர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட தர அலுவலர்களிற்கு பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. அத்துடன் மதுவரி சாரதி சேவையிலுள்ள சாரதிகளிற்கு அவர்களின் வினைத்திறன் அபிவிருத்தி பொருட்டு 3 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

மேலும் 2020.03.18 முதல் 2020.06.30 வரை நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக எந்தவொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடைபெறவில்லை என்பதுடன், வருடத்தின் இரண்டாம் காலாண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

அத்துடன் கொவிட் 19 தொற்றுநோய் நிலையின் கீழ் வருடத்தின் பின்னரைப் பகுதியில் திறன் மற்றும் சிரேஸ்ட அடிப்படையில் பதவியுயர்வு பெற்ற 34 மதுவரி சார்ஜன்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் பதவியுயர்வு பெற்ற 48 மதுவரி சார்ஜன்கள் ஆகியோருக்கு பயிற்சிநெறி நடத்துதல், புதிய மதுவரி பரிசோதகர்கள் 16 பேருக்கு பயிற்சி வழங்குதல், பதவியுயர்வு பெற்ற மதுவரி அத்தியட்சகர்கள் 11 பேருக்கும் பிரதான மதுவரி பரிசோதகர்கள் 12 பேருக்கும் ஆரம்ப விசாரணை பற்றிய வழங்குதல் அடங்கலாக 26 பயிற்சி நெறிகள் 2020 இல் நடத்தப்பட்டதன் ஊடாக அலுவலர்களின் தேர்ச்சியை மேம்படுத்த மனித வளப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### * நிறுவனத்தின் செயலாற்றுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை

நவீன உலகின் பெறுமதி மிக்க வளங்கள் மனித வளங்களாக தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மனித வளங்களைப் பாதுகாத்தல், விருத்தி செய்தலின் ஊடாக எந்த ஒரு நிறுவனமும் மேம்பாடடையும். மனித வள அபிவிருத்தியானது, அவர்களின் அறிவு, சேவைக்கு ஏற்ப நிரந்தரப் பயிற்சியின் ஊடாக விருத்தி செய்யப்படக் கூடிய அவர்களின் மென்பொருள் பற்றிய அறிவு( மென்பொருள் தேர்ச்சி - Soft Skills) மற்றும் வன்பொருள் பற்றிய அறிவு ( வன்பொருட் தேர்ச்சி - Hard Skills) என்பவற்றை தொடர்ச்சியாக இற்றைப்படுத்துதல் அவசியமானதாகும்.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் குறிக்கோள் மற்றும் செயற்பாட்டினை வினைத்திறன் மிக்க முறையில் மேற்கொள்ளும் நோக்கில் தொடர்ச்சியாக உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிகள் நடத்தப்படுவதுடன் அப்பயிற்சிநெறிகள் திணைக்களப் பயிற்சிக் கல்லூரியிலும் அங்கீகரிக்கப்பட்ட வெளியகப் பயிற்சி நிறுவனங்களிலும் வழங்கப்படுகின்றன. இதற்காக மதுவரித் திணைக்களத்தின் வளவாளர்கள் பங்களிப்புச் செய்ததுடன் வெளியக கற்ற வளவாளர்களும் பங்களிப்புச் செய்கின்றனர். இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயல் நோக்கை நிறைவேற்றும் குறிக்கோள்களில் பிரதான பணிகளாக காட்டப்பட்ட செயல்நோக்கை மேற்கொள்ளும் பொருட்டு 2020 ஆம் ஆண்டில் 26 உள்நாட்டுப் பயிற்சி நெறிகள் மாத்திரம் நடத்தப்பட்டதுடன், வருடம் முழுவதும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக வெளிநாட்டு பயிற்சி எதுவும் இடம்பெறவில்லை. இயன்றளவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்ட பயிற்சிகளை சுகாதார விதிமுறைகளின் கீழ் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிரந்தரமாக சமுகத்தில் ஊடறுத்துள்ள சட்ட விரோத போதைப் பொருட்கள், மதுபானக் கடத்தலை கட்டுப்படுத்தும் வகையிலும் சட்டம் மற்றும் அண்மையில் இனங்காணப்பட்ட போதைப்பொருள் பற்றியும் அதனைக் கட்டுப்படுத்தல் பற்றியுமான புதிய முறைகள் தொடர்பில் மதுவரி அலுவலர்களிற்கு தொடர் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக இலங்கை பொலிஸ், தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டு சபை என்பவற்றின் பயிற்சி வளவாளர்களின் உதவியும் அவர்களது இரசாயனப் பகுப்பாய்வுகூட வசதியும் பெறப்பட்டது. எனினும் வெளியக நிறுவனத்துடன் இணைந்து பயிற்சி நெறி பொருட்டு வளவாளர்களின் பங்களிப்பைப் பெறுதல் தற்போது நிலவும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக மட்டுப்படுத்த நேரிட்டது.

**மனித வள அபிவிருத்தி**

| தொடரில. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் கால அளவு | மொத்த முதலீடு (ரூ.) | | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாடு/வெளிநாடு) | வெற்றிடம் நிலவிய காலம |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாடு | வெளிநாடு | | |
| 01 | சிறு நிதியை கட்டுநிதிக் கணக்கில் இடுதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 220 | இருநாட்கள் | 55,600.00 | - | உள்நாடு | பிராந்திய அலுவலகங்களின் தலைவர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்களிற்கு அலுவலகங்களில் சிறு நிதியை கட்டுநிதிக் கணக்கில் இடுதல் பற்றிய பயிற்சி. |
| 02 | மதுவரி அலுவலர்களிற்கு குற்றவியல் சட்டத்தை செயற்படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 65 | இருநாட்கள் | 92,620.00 | - | உள்நாடு | பிரதான மதுவரிப் பரிசோதகர்கள், மதுவரி பரிசோதகர்களிற்கு குற்றவியல் சட்டம் பற்றிய அறிவை வழங்குதல் மற்றும் குற்றவியல் சட்ட வலுப்படுத்தல் பயிற்சி மற்றும் அறிவை வழங்குதல் |
| 03 | மதுவரி அறிவித்தல்களை இற்றைப்படுத்தும் பயிற்சிப்பட்டறை | 45 | இருநாட்கள் | 36,995.00 | - | உள்நாடு | சிரேஸ்ட அலுவலர்களிற்கு மதுவரி அறிவித்தல்கள் பற்றிய அறிவை மேம்படுத்தல் |
| 04 | உற்பத்திச்சாலை, குதம், வடிசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களிற்கான பயிற்சிநெறி | 165 | ஒரு வாரம் | 139,790.00 | - | உள்நாடு | பிரதான மதுவரி பரிசோதகர்கள், மதுவரி சார்ஜன்கள், மதுவரி கோப்ரல் மற்றும் மதுவரி காவலாளர்களிற்கு உற்பத்திச்சாலை, குதம், வடிசாலைகளை நிர்வகித்தல், |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | சட்ட ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகளை அவை தொடர்பான கணனிப்படுத்தல் ஆவணங்களில் பேணுதல், தொழில்நுட்பம் பற்றிய விடயப் பரப்பைத் தெளிவுபடுத்தல் |
| 05 | தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் பற்றிய இருநாட் பயிற்சிப்பட்டறை | 06 | இருநாட்கள் | 51,000.00 | - | உள்நாடு | பிரதி மதுவரி ஆணையாளர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களிற்கு தாபன விதிக் கோவை பற்றிய அறிவு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவை மேம்படுத்தல் |
| 06 | சாரதிகளினதும் கனிஸ்ட அலுவலர்களினதும் கடமைகள், பொறுப்புகள் பற்றிய பயிற்சி | 08 | இருநாட்கள் | 68,000.00 | - | உள்நாடு | சாரதிகளினதும் கனிஸ்ட அலுவலர்களினதும் கடமைகளிற்குத் தேவையான ஆவணங்களைப் பேணுதல், உரிய ஒழுங்குவிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவு. |
| 07 | தொலைபேசி இயக்குனர் மற்றும் ஆவணப் பணிகள் பற்றிய பயிற்சி | 04 | இருநாட்கள் | 34,000.00 | - | உள்நாடு | பெண் மதுவரி காவலாளர்களுக்கு தொலைபேசி இயக்குதல் பற்றிய அறிவு மற்றும் ஆவண இடாப்புக் கடமைகள் பேணுதல் பற்றிய அறிவு |
| 08 | முறைசார் கடிதம் தயாரிக்கும் தேர்ச்சி (Formal Letter Writing Skills) | 01 | மூன்று நாட்கள் | 18,000.00 | - | உள்நாடு | முகாமைத்துவ சேவை அலுவலர்களிற்கு அலுவலக முறைசார் கடிதம் தயாரித்தல், ஆவணம் தயாரிக்கையில் பொதுவாக ஏற்படும் தவறு பற்றிய அறிவு |
| 09 | புதிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் உள்ளக நிர்வாக முறை அபிவிருத்தி | 02 | இருநாட்கள் | 17,000.00 | - | உள்நாடு | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதான முகாமைத்துவ சேவை அலுவலர்களிற்கு புதிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் உள்ளக நிர்வாக முறை அபிவிருத்தி பற்றிய பயிற்சி மற்றும் அறிவு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | சாரதிகளின் வினைத்திறனை மேம்படுத்தல் | 05 | இருநாட்கள் | 42,500.00 | - | உள்நாடு | சாரதிக் கடமைகளிற்குரிய ஆவணங்களை பேணுதல், உரிய ஒழுங்குவிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய பொறிமுறைத் தொழில்நுட்ப அறிவு, வாகனப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் பற்றிய பயிற்சி. |
| 11 | வருடாந்த பொருட் கணக்கெடுப்பு மற்றும் சொத்து முறைகேடு | 01 | இருநாட்கள் | 8,500.00 | - | உள்நாடு | முகாமைத்துவ சேவை அலுவலர்களிற்கு நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு பற்றிய முறை, சொத்து அகற்றுதல் செயன்முறை பற்றிய அறிவு |
| 12 | நிறுவனங்களிற்கான பெறுகைத் திட்டம் மற்றும் செயற் திட்டத்தைத் தயாரித்தல் | 01 | இருநாட்கள் | 15,000.00 | - | உள்நாடு | நிர்வாக உத்தியோகத்தர்களிற்கு நிறுவன பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் செயற் திட்டம் தயாரிப்பதற்கு தேவையான அறிவு மற்றும் பயிற்சி |
| 13 | போதைப்பொருள் பற்றிய சட்டத்தை செயல்வலுப்படுத்தல் | 11 | மூன்று மாதம் | 27,5000.00 | - | உள்நாடு | மதுவரி காலாளர் மற்றும் பெண் மதுவரி காவலாளர்களிற்கு இலங்கையில் போதைப்பொருள் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நவீன அறிவு மற்றும் தேர்ச்சியை வழங்குதல் |
| 14 | தேர்ச்சி மற்றும் சிரேஸ்ட அடிப்படையில் பதவியுயர்த்தப்பட்ட மதுவரி சார்ஜன்களிற்கான பயிற்சி | 34 | மூன்று நாட்கள் | 154,260.00 | - | உள்நாடு | தேர்ச்சி மற்றும் சிரேஸ்ட அடிப்படையில் பதவியுயர்த்தப்பட்ட மதுவரி சார்ஜன்களிற்கு தமது கடமைகளை நிறைவேற்றத் தேவையான பயிற்சி மற்றும் அறிவை வழங்குதல் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் பதவியுயர்த்தப்பட்ட மதுவரி சார்ஜன்களிற்கான பயிற்சி | 48 | 06 நாட்கள் | 332,800.00 | - | உள்நாடு | மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் பதவியுயர்த்தப்பட்ட மதுவரி சார்ஜன்களிற்கு தமது கடமைகளை நிறைவேற்றத் தேவையான பயிற்சி மற்றும் அறிவை வழங்குதல். |
| 16 | சுய விபரக் கோவை முகாமைத்துவம் | 01 | மூன்று நாட்கள் | 18,000.00 | - | உள்நாடு | மதுவரி பரிசோதகர்கள், மதுவரி சார்ஜன்கள் மற்றும் மதுவரி காவலாளர்களிற்கு சுய விபரக் கோவை கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு சுய விபரக் கோவை பேணுவதற்குத் தேவையான அறிவை வழங்குதல் |
| 17 | சாரதிகளின் தேர்ச்சி அபிவிருத்தி | 05 | இருநாட்கள் | 40,000.00 | - | உள்நாடு | சாரதிக் கடமைகளிற்குரிய ஆவணங்களை பேணுதல், உரிய ஒழுங்குவிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய பொறிமுறைத் தொழில்நுட்ப அறிவு, வாகனப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் பற்றிய பயிற்சி. |
| 18 | சாரதிகளின் வினைத்திறனை மேம்படுத்தல் | 05 | இருநாட்கள் | 42,500.00 | - | உள்நாடு | சாரதிக் கடமைகளிற்குரிய ஆவணங்களை பேணுதல், உரிய ஒழுங்குவிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய பொறிமுறைத் தொழில்நுட்ப அறிவு, வாகனப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் பற்றிய பயிற்சி. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | குற்றவியல் சட்டம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா | 09 | ஒரு வருடம் | 598,500.00 | - | உள்நாடு | இலங்கையில் குற்றங்களின் தன்மை, வகைப்படுத்தல், இலங்கை குற்றவியல் சட்டம், தண்டனைச் சட்டக் கோவை பற்றிய தெளிவுபடுத்தல் |
| 20 | அரசாங்க சம்பள முறைமை பற்றிய பயிற்சி (Government Payroll System) | 01 | மூன்று நாட்கள் | 18,000.00 | - | உள்நாடு | முகாமைத்துவ சேவை அலுவலர்களிற்கு அரச சம்பள முறைமை, சம்பள மாற்றீடு பற்றிய பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல். |
| 21 | பிரயோகக் குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா | 08 | | 443,200.00 | - | உள்நாடு | மதுவரி காவலாளி, பெண் மதுவரி காவலாளிகளிற்கான இலங்கை குற்றங்களின் தன்மை மற்றும் வகைப்படுத்தல் பற்றிய விரிவான தெளிவுபடுத்தல், குற்ற வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் காரணியை இனங்காணுதல், உலகளாவிய, தேசிய ரீதியான குற்ற நீதி முறைமை, அதன் பிரயோகத் தன்மையை இனங்காணுதல். |
| 22 | திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி பதவி உயர்த்தப்பட்ட மதுவரிப் பரிசோதகர்களிற்கான சேவையின் போதான பயிற்சி | 16 | 10 நாட்கள் | 393,295.00 | - | உள்நாடு | பதவி உயர்த்தப்பட்ட மதுவரிப் பரிசோதகர்களிற்கு தமது கடமைகளை சரியாக மேற்கொள்ளத் தேவையான பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல். |
| 23 | பதவிநிலை அலுவலர்களிற்கான ஆரம்ப விசாரணை நடத்துதல், குற்றப் பத்திரிகை தயாரித்தல் மற்றும் ஒழுக்காற்று விசாரணையில் முறைப்பாட்டைக் கையாளல் என்பன பற்றிய பயிற்சி | 23 | இருநாட்கள் | 69,785.00 | - | உள்நாடு | பதவிநிலை அலுவலர்களிற்கான ஆரம்ப விசாரணை நடத்துதல், குற்றப் பத்திரிகை தயாரித்தல் மற்றும் ஒழுக்காற்று விசாரணையில் முறைப்பாட்டைக் கையாளல் என்பன பற்றிய பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா | 01 | | 50,000.00 | - | உள்நாடு | பிரதி மதுவரி ஆணையாளர்களிற்கு அரச பெறுகை, அதன் முக்கியத்துவம், விலை மனு கோரற் செயன்முறை, விலை மனு மதிப்பீடு, ஒப்பந்த நிர்வாகம் பற்றிய தெளிவுபடுத்தல். |
| 25 | உளவியல் ஆலோசனையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 01 | | 50,000.00 | - | உள்நாடு | மதுவரி பரிசோதகர்களிற்கான மனோவியல் ஆலோசனை பற்றிய பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல். |
| 26 | குற்றவியல் நீதி பற்றிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 05 | | 450,000.00 | - | உள்நாடு | மதுவரி அத்தியட்சகர்கள், மதுவரிப் பரிசோதகர்கள் மற்றும் மதுவரி சார்ஜன்களிற்கான உலகளாவிய, தேசிய ரீதியான குற்ற வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் காரணிகளை இனங்காணுதல் மற்றும உலகளாவிய, தேசிய ரீதியான குற்ற நீதி முறைமை, அதன் பிரயோகத் தன்மையை இனங்காணுதல். |

# அத்தியாயம் - 07

## இணக்கப்பாட்டு அறிக்கை

**7.1** நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை

# அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுநிலை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதற்கான சிறு விளக்கம் | எதிர்காலத்தில் இணக்கமற்றமையை தவிர்ப்பதற்கு முன்வைக்கும் தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| **01** | **கீழே குறிப்பிட்ட நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் | இணக்கமானது | | |
| 1.3 | வணிக, உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக உற்பத்திக் கணக்குகள்) | ஏற்புடையதன்று | 1.இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று | 2. .இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று | 3. .இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.6 | ஏனையவை | ஏற்புடையதன்று | 4. .இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| **02** | **புத்தகங்கள், பதிவுகளைப் பேணுகை (நி.ஒ.445)** | | | |
| 2.1 | அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 267/2018 இன் படி நிலையான சொத்துகளின் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவேடுகள்/ தனிநபர் ஊதிய அட்டைகள் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்கு சுருக்கங்கள் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்புகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டைப் புத்தகங்களின் (GAN20) பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **03** | **நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.ஒ. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகார கையளிப்பு பற்றி நிறுவனத்திற்கு தெரியப்படுத்தல் | இணக்கமானது | | |
| 3.3 | சகல கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதனிலும் கூடிய அலுவலர்களின் ஊடாக இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி சம்பளப் பட்டியல் மென்பொருள் பொதியை பயன்படுத்துகையில் கணக்காளர்களின் நிர்வாகத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| **04** | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த பெறுகை திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த நிதிப்பாய்ச்சல் அறிக்கையை உரிய திகதியில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **05** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல் | இணக்கமானதன்று. | திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் பரந்தளவில் இருப்பதால் கணக்காய்வு ஐயவினாக்களிற்கு விடையளிக்க சிறிது காலம் தேவை. எனவே தாமதம் ஏற்பட்டது. | பிராந்திய அலுவலகங்களில் உள்ள வினவுதலுக்கு உட்படும் அலுவலர்களை தலைமை அலுவலகத்திற்கு வரவழைத்து விடையளிக்க நடவடிக்கை எடுத்தல். |
| **06** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.ஒ. 134 (2) DMA/1-2019 இன்படி வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | *அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்பட்டது* | இணக்கமானது | | |
| 6.3 | *2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) ஆம் உப பிரிவின் பிரகாரம் அனைத்து* | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | | | |
| 6.4 | 134(3) நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| **07** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றது. | இணக்கமானது | DMA/AMC/M/2020/5-4 மற்றும் 2020.06.11 ஆம் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களக் கடிதத்தின் பிரகாரம் | |
| **08** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 பந்தியின் பிரகாரம் சொத்து கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பிலான தகவல்கள் கொன்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்தவும் அத ்தகைய அதிகாரியை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பவும் பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுளார் | இணக்கமானது | | |
| 8.3 | 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு உரிய அறிக்கைகளானது கணக்காய்வாளர் அதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம் மற்றும் பற்றாக்குறைக்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டது. | இணக்கமானது | | |
| 8.5 | நிஒ. 772 இன் பிரகாரம் பாவனைக்கு உகந்ததற்ற பொருள்கள் அகற்றப்பட்டது | இணக்கமானது | | |
| **09** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களிற்கான நாளாந்த வாகன ஓட்ட அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானதன்று | **அவ்வேளையில் ஓட்ட அறிக்கை முறையாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.** | **எதிர்காலத்தில் இந்நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.** |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.2 | பயன்பாடற்ற வாகனங்கள் பயன்பாடு நீக்கப்பட்டதன் 6 மாதங்களினுள் அகற்றப்பட்டது. | இணக்கமானதன்று | **கோவிட் தொற்றுநோய் காரணமாக இந்நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலவில்லை. தற்போது இந்நடவடிக்கைகள் முடிவடையும் தறுவாயிலுள்ளது.** | **எதிர்காலத்தில் முறையாக மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.** |
| 9.3 | வாகன ஏடுகள் பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பில் நி.ஓ 103, 104, 109 மற்றும் 110 இற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | இணக்கமானதன்று | **தற்போது நி.ஓ விதிகள் முறையாக பரிசீலிக்கப்ட்டு வருகிறது.** | **எதிர்காலத்தில் உரிய காலத்தில் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.** |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய் 2016/30 ஆம் அரச நிருவாக சுற்றிக்கையிலன் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகன எரிபொருள் பாவனை மீளப் பரீட்சிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை காலம் முடிவடைந்த பின்னர் குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகம் மாற்றப்பட்டது. | இணக்கமானது | | |
| **10** | **வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு உரியநேரத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டு அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டன | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல், சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்தினுள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| **11** | **நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை அதன் வரையறைகள் மீறாது செலவளிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 11.2 | நி.ஓ. 94(1) இன் பிரகாரம் ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும் | இணக்கமானது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | கடன்களில் கால ஆய்வு மேற்கொள்ளப்பட்டது | இணக்கமானது | | |
| 12.3 | ஒருவருடத்திற்கு மேற்பட்ட கடன் மீதிகள் தீர்க்கப்பட்டன | **இணக்கமற்றது** | **தற்போது அறவிடல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.** | **சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் கடன் மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.** |
| **13** | **பொது வைப்பு கணக்கு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13.1 | காலம் பிந்திய வைப்புகள் தொடர்பில் நி.ஒ. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது | இணக்கமற்றது | **தலைமை அலுவலகக் கட்டடத்தில் இருந்த நிர்மாண குறைபாடுகளை மீளவும் சீராக்கும் வரை பிடித்துவைத்தல் நிதியை விடுவிக்காமை** | **பொது வைப்புக் கணக்குகளின் நிலுவையை உரிய காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.** |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | வருட முடிவில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது | இணக்கமானது | | |
| 14.2 | நி.ஒ. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால வழங்கல் பணி முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டது | இணக்கமானது | | |
| 14.3 | நி.ஒ. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை விஞ்சாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தம் திறைசேரி புத்தகத்துடன் கட்டுநிதி கணக்கின் மீதி கணக்கிணக்கம் செய்யப்பட்டது. | இணக்கமானது | | |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | ஒழுங்குவிதிகள் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானத்தை மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 15.3 | நி.ஒ 176 இன் பிரகாரம் வருமானத்தின் மீதியை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **16** | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலம் கடமை நிரல் வழங்கப்பட்டது | இணக்கமானது | | |
| 16.3 | 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் MSD சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு(MSD) சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **17** | **பொது மக்களுக்கு தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் பதிவேடு பராமரிக்கப்படுவதுடன் இற்றைப்படுத்தப்படுகின்றது | இணக்கமானது. பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்) இனால் செயற்படுத்தப்பட்டது. | | |
| 17.2 | நிறுவனத்தின் தகவல்கள் பொது மக்களுக்கு வலைத் தளத்தினூடாக அல்லது வேறு ஏதேனும் முறையில் வழங்கப்படுவதுடன் அரச அதிகாரிக்கெதிரான பாராட்டு/ குற்றச்சாட்டினை இந்த வலையத் தளத்தினூடாக அல்லதுவேறு ஏதேனும் முறையில் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது. | இணக்கமானது. பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்) இனால் செயற்படுத்தப்பட்டது. | | |
| 17.3 | சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இருமுறையான அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது. பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்) இனால் செயற்படுத்தப்பட்டது. | | |
| **18** | **பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனமானது ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கி அமுல்படுத்தியது | உரிமப் பிரிவின் பொருட்டு இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கவதையும் அமுல்படுத்துவதையும் கண்காணிக்கவும் மதிப்பிடவும் நிறுவனத்தால் ஓர் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது | இணக்கமற்றது | தலைமை அலுவலகத்தின் உரிமங்கள் பிரிவில் காட்சிப்படுத்துவதற்காக பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனத்தை மேம்படுத்தும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல | உரிய சகல பிரிவுகளிலும் பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனத்தைக் காட்சிப்படுத்தல். |
| **19** | **மனிதவள திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 02/2018 இனது இணைப்பு 2 இன் வடிவமைப்பின் பிரகாரம் மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது. | | |
| 19.2 | மேற்கூறப்பட்ட மனிதவள திட்டத்தில் ஆளனியினரின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு வருடமும் 12 மணித்தியாளத்திற்கு குறையாத குறைந்தபட்ச பயிற்சிக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | இணக்கமானது. | | |
| 19.3 | மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கை இணைப்பு 01 இல் காட்டப்பட்ட வடிவில் மொத்த அலுவலர்களிற்கும் வருடாந்த நிறைவேற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின் பந்தி 6.5 இன் படி மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், திறன் அபிவிருத்தி செயற்படுத்தல் தொடர்பில் ஒரு சிரேஸ்ட அலுவலர் நியமிக்கப்படல் | இணக்கமானது. | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளிற்கான பொறுப்புக்கூறல்** | | | |
| 20.1 | முந்தைய வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது. | | |